Registered No. M. 878.

ॐ

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 4. } 1914ஞ் எப்பிரல்மீ 15உ ஆநந்தஞ் சித்திரைமீ 3உ { பகுதி 12

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2 தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 428
From the Editor—A. Rangaswami Iyer

2. அஸ்ஸிஸ்ஸி தேசத்து ஸெண்ட் பிரான்ஸிஸ் என்ற ஞானியார் } B.S.R. சுப்பிரமணியன் 435B
Saint Francis of Assissi—B. S. R. Subramanian

3. ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜம் 436
Atmabodha—Yogi Sundararajam.

4. பிரஹ்மக்ஞான தர்சநம் பாலபாடம்) } வி. வெங்குஸ்வாமி ஐயர் 444
Elements of Theosophy—V. Venguswamy Iyer.

5. அஹல்யா சாபவிமோசநம்—R. ஸ்ரீநிவாஸ ஐயர் 447
Curse of Ahalya discharged—R. Srinivasier, M.A.,

6. பிரஹ்மக்ஞான சங்கமும் அதன் கொள்கைகளும் } ஆத்தங்குடி ஸ்வாமிநாத ஐயர். 457
T. S and its teachings.

7. தோற்றுத்துணைவர்கள்—அ. நம்மாழ்வார். 458
Invisible Helpers—A. Nammalwar.

8. ஹிந்துக்களின் பூர்வநூல்கள்—R.S. நாராயணஸ்வாமி ஐயர் 464
Ancient Hindu Literature—R. S. Narayanaswamy Iyer.

9. புத்தக வரவு. 468
Review of Books.

10. பத்திரிகை வரவு. 468
Review of Papers.

11. சமாசாரம். 469
News.

காலஞ்சென்ற ப. நாராயணஐயரவர்கள் பிரசுரித்திருக்கும்
தமிழ்ப் புத்தகங்கள்.

1.	பதஞ்ஜலியோக சூத்திரம்	ரூ. 1—0—0
2.	மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள்	0-12—0
3.	இயேசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்க முறைநூல்	1—0—0
4.	மனிதன் வமிசாவளியின் உண்மை	0—8—0

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் மதுரை பிரஹ்மக்ஞான ஸபைப் பிரெசிடெண்டு அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. | 1914ளு ஏப்ரில்மீ 15உ | பகுதி 12
ஆநந்தளு சித்திரைமீ 3உ

தற்கால நிலைமை.

பாண்டியநாட்டு பிரஹ்மக்ஞான சங்கமானது சென்ற மாதம் 20, 21, 22 தேதிகளில் புராதன க்ஷேத்திரமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் கூடிற்று. அந்த க்ஷேத்திரமானது தென்னிந்தியாவில் வைஷ்ணவ ஸம்ப்ரதாயச் சரித்திரத்தில் பெயர்பெற்றது. பூர்வத்தில் பக்த சிரேஷ்டர்களுடைய இருப்பிடமானதால் அவர்களால் புனிதமாகச் செய்யப்பட்டது. ஈசுவரனிடத்தில் பரம பக்தியுள்ள ஆண்டாள் கோதை அல்லது சூடிக்கொடுத்த நாச்சியார் என்று திருநாமம் தரித்த பக்த சிரோமணிக்கு அர்ப்பணஞ்செய்யப்பட்டது. பிரஹ்மக்ஞான சங்கத்தின் தத்வார்த்தத்தை அறிந்தவர்கள் விசுவாசத்துடன் கொண்டாடுகிற ஸ்ரீ ராமாநுஜாசாரியரால் தரிசிக்கப்பெற்றுள்ளது.

*
* *

இவ்வாறு ப்ராசீன கௌரவத்தோடு பொருந்திய திவ்விய தேசத்தில் கூடின சங்கத்தில் அடையாறு, மதுரை, ஆத்தங்குடி சாத்தூர், கடம்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவ்வூரிலுள்ள பிரஹ்மக்ஞானசபை மெம்பர்களும் மற்றுமுள்ள நகரவாசிகளும் வந்த பிரதிநிதிகளை உபசரிக்க ஏற்பாடு செய்திருந்தனர். அடையாற்றிலிருந்

சங்கத்தின் அக்கிராஸனாதிபதியாகிய Mr. B. P. வாடியா, Mr. குரோம்பி, Mrs. ஸ்டெட், Miss. ஸ்வேர்ட் இவர்கள் வந்தனர். மதுரையிலிருந்து அநேகம் மெம்பர்களும் கூடினர்.

* * *

20உ சாயங்காலம் Mr. B. P. வாடியா 'Spiritual Life' அல்லது 'ஆத்மார்த்த வாழ்க்கை' என்ற விஷயத்தைக் குறித்து உபந்நியாஸம் செய்தனர். தத்வ சாஸ்திரங்கள் கற்றலும் பிரசங்கங்கள் செய்தலும் கேட்டலும் இவ்வுலகவாழ்க்கையில் பரோபகார விருப்பத்தையும் அதற்கேற்ற செய்கையையும் உண்டுபண்ணினாலன்றி பிரயோஜனமற்றனவாம். மறுநாள் சங்கமானது கூடிற்று. 'Reception Committee' என்ற உபசரணை கம்மிட்டியின் அக்கிராஸனம் வகித்த Mr. மார்ட்டின் என்பவர் நல்வரவுகூறி உபசரித்தனர். அவர் பிரஹ்மக்ஞானசபை விஷயமாய் அதிகமாய் வாசித்துத் தெரிந்துகொள்ளாதபோதிலும் தான் Mr. சார்லெஸ் பிராட்லா Mrs. அன்னி பெஸண்டு அம்மையார் இவர்களைக்குறித்து ஆங்கிலேய தேசத்தில் தெரிந்துகொண்டிருப்பதாகவும் Mrs. அன்னிபெஸண்டு அம்மையார் நல்ல எண்ணத்துடன் பொது நன்மைக்கு பாடுபடுகிறவர்களென்று தான் அறிந்துகொண்டிருப்பதால் Reception Committee என்ற உபசாரணைக்கம்மிட்டிக்கு அக்கிராசனாதிபதியாகவிருக்கச் சம்மதித்ததாகவும், எல்லா மதங்களையும் துவேஷமின்றி சமமாய் பாவித்து அவைகளின் ரஸத்தைக் கிரகித்து ஸகோதர பாவத்தைக் கொண்டாடுகிற பிரஹ்மக்ஞான சங்கமானது மதத்துவேஷத்தை அநுசரித்த கட்சிகளால் பாதிக்கப்பட்டு பொது நன்மையில் ஊக்கம் குன்றின ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நன்மையைப் பயக்கத் தக்கதென்றும் சொல்லினர்.

* * *

Mr. B. P. வாடியர் அக்கிராசனாதிபதியாக உபந்நியாஸம் செய்தார். Mr. குரோம்பி பிரஹ்மக்ஞானத்திற்கும் வாழ்வுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும், Mrs. ஸ்டெட் மேற்றிசையில் பிரஹ்மக்ஞான சபையின் அபிவிருத்தியைப்பற்றியும், உபந்நியாஸம் செய்தனர். Mrs. ஸ்வேர்ட் ஸ்திரீகளின் அபிவிருத்தியைக்குறித்து அங்

திருந்தவர்கள் குதூகலத்துடன் அறிந்து சந்தோஷமடையும் வண்ணம் சாதுரியமாயும் எளிதில் தெரிந்துகொள்ளும்படியாயும் வர்புறுத்திக்கூறினர். மேற்சொல்லியவைகளைத் தவிர பிரஹ்மஸ்ரீ P. R. சுந்தரராஜஐயரவர்களும் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பிரதான நகரவாசிகளில் ஒருவராகிய K. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும், ஆத்தங்குடி சுப்பிரமணியரவர்களும் சாத்தூர் எஸ். சுப்பிரமணிய நாயுடுவர்களும், கடம்பூர் பஞ்சாபகேசஐயரவர்களும், ஆத்தங்குடி கும்ரப்ப செட்டியாரவர்களும் மதுரை என். ராமஸ்வாமி ஐயரவர்களும் பல விஷயங்களைக் குறித்து உபந்நியாஸம் செய்தார்கள்.

* * *

இங்கிலீஷில் செய்யப்பட்ட ஒவ்வொரு உபந்நியாஸமும் இங்கிலீஷ் தெரியாதவர்களின் பிரயோஜனத்திற்காக தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லப்பட்டது. பிரஹ்மக்ஞான சபையின் விருத்தாந்தமும் அதின் பிரயோஜனமும் அதினால் ஜனங்களின் க்ஷேமம் விருத்தியாகுந் தன்மையும் பொதுவான ஜனங்களுக்கு எளிதில் தெரியுமாறு எடுத்து விவரிக்கப்பட்டன. நமது தேசத்தில் பெரும்பான்மையோருக்கு அவர்களுடைய ஸ்வபாஷைமட்டும் தெரியக்கூடியது. ஆங்கிலேய பாஷை தெரியக்கூடியதல்ல. பிராசீன மதாபிமானம் ஆசார சீலம் இவைகளுடன் நவீன சாஸ்திர பயிற்சியையும் மேற்கொண்டு நமது தேச அபிவிருத்தியின் பொருட்டு உழைத்து வருகின்ற பிரஹ்மக்ஞான சங்கத்தின் பிரயோஜனத்தை எல்லோரும் அடைதற்பொருட்டு சங்கத்தின் நடபடிக்கைகள் தமிழில் வரும்படுவது சிலாக்கியந்தான். இச்சபை ஸ்ரீ வில்லிபுத்தூரில் கூடினதிலிருந்து அவ்வூருக்கு பிரஹ்மக்ஞானசபையை ஆதரித்துவருகிறமகரிஷிகளின் அனுக்கிரகம் கிடைக்கத்தக்கதென்றே நாம் ஊகிக்கத்தக்கது. அவ்வநுக்கிரகத்தின் பிரயோஜனத்தை முற்றிலும் பெறுவதற்கு, மதாபிமானமுற்ற அந்நகர்வாசிகள், அவ்வூரில் நிகழும் வடகலை தென்கலையோர்களின் கட்சியானது அவ்வூரின் லௌகிக க்ஷேமத்திற்கு இடையூறாக விருக்கக் கூடியதென்றும், பக்தி மார்க்கத்தில் பக்த கோடிகளை நிலைநிறுத்துகின்ற புண்ய க்ஷேத்திரங்களில் அது ஒன்று என்ற பெருமைக்கு விரோதமாயுளதென்றும், அறிந்து

கொண்டு அவ்விரு சார்பாருக்கும் ஏற்படும் விவகாரங்களைப் பொது மனிதர்களின் மூலமாய்த் தீர்த்துக்கொள்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.

* * *

கடப்பைஜில்லா பிரஹ்மக்ஞான சங்கமானது சென்ற மார்ச்சு மாதம் 21, 22 தேதிகளில் அந்த ஜில்லாவில் புரோடட்டூர் என்னும் ஊரில் கூடிற்று. அதற்கு மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார். பிரஹ்மக்ஞான வித்தியாபிவிருத்தி சங்கத்திற்குச் சேர்ந்த அவ்வூரில் உள்ள நாஷனல் ஹைஸ்கூல் என்ற வித்தியாசாலையின் அஸ்திவாரத்திற்கு மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையாரால் ஆரம்பம் செய்யப்பட்டது. ரூ 20,000 செலவு செய்து கட்டிடம் கட்ட யோசித்திருக்கிறார்கள். வாலிபர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையைக் குறித்து அவர்கள் உபந்நியாசம் செய்தார்கள். அந்த உபந்நியாசத்தில் வாலிபர்களுக்குக் கொடுக்கவேண்டிய கல்வியின் தன்மையைக்குறித்தும் அவ்வாலிபர்கள் கல்வி கற்கும்போதே உத்தம குணங்களை அவலம்பிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் அவர்கள் தேக வலிமையை அடைவதைக்குறித்தும் கீழ்ப்படிதல், ஒற்றுமையோடிருத்தல், பொது நன்மையைநாடுதல், தன்னை அடக்கி ஆளுதல்; இவைகளைக்கைக்கொண்டால்மட்டில் தேசாபிவிருத்தி ஏற்படக்கூடியதென்பதைப் பற்றியும் இந்துப் பெண்களுக்கு ஆத்மார்த்தித்திற்கு விருத்தமான கல்வியைக் கொடுக்கக்கூடாதென்றும், அப்படிக் கொடுத்தால் தேசநாசம் உண்டாகும் என்றும் ஆகையால் அவர்களுக்கு மத சிரத்தையை அநுசரித்த கல்விப்பயிற்சி அவசியமென்பதைப்பற்றியும், இந்திய தேசத்தை ஜனன பூமியாக அடைந்த இந்தியன் இந்த தேசத்தின் நன்மைக்காக உழைக்காவிடின் அவன் தேச துரோகியாவான் என்றும் எல்லோர் மனதையும் கவரத்தக்கதாய் எடுத்துக்கூறினர்.

* * *

திரிச்சிராப்பள்ளி ஜில்லா குரும்பலூர் கிராமத்தில் பிரஹ்மக்ஞான சபையின் அபிமானிகள் சென்றமீ 27உ யில் சபைகூடினர்கள். அந்த சபையில் மதுரை பிரஹ்மக்ஞான சபை காரியதரிசியும் மதுரை ஐக்கோர்ட்டு வக்கீலுமாகிய மகா-௱-௱-ஸ்ரீ வி. ராமசந்திர

ஐயரவர்கள் அக்கிராஸனாதிபதியாக விருந்தார்கள். அச்சபையோர்கள்மிக சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் பிரஹ்மக்ஞானசங்கத்திற்கு அவர்களுடைய அநுதாபத்தைக் காட்டி அங்கு பிரஹ்மக்ஞான சபையின் கிளைச்சங்கம் ஸ்தாபிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குரும்பலூரில் இவ்விதம் உத்ஸாகத்துடன் முயற்சிக்கிறவர்களில் பெரும்பான்மையோர் ஆங்கிலம் தெரியாதவர்களே. இப்பத்திரிகை ஸ்தாபித்த காலம்சென்ற Mr. P. நாராயண ஐயரவர்கள் தமிழ் கிரந்தங்கள் மூலமாய் பிரஹ்மக்ஞான சபையின் விஷயங்களைப்பரவச்செய்ததிலிருந்தே குரும்பலூர் வாசிகளின் அநுதாபம் ஏற்பட்டிருக்கிறதென்று நாம் சொல்லத் துணியலாம்.

* * *

திருநெல்வேலி ஜில்லா கடம்பூர் கிராமத்தில் நாடார் சபை மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமசந்திரஐயரவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் கூடிற்று. பிரஹ்மக்ஞான சபை மெம்பர்களாகிய மகா-ா-ா-ஸ்ரீ P. R. சுந்தரராஜ ஐயரவர்களும் பஞ்சாபகேசஐயரவர்களும் தமிழில் உபந்நியாஸம் செய்தார்கள்.

* * *

சென்ற மார்ச்சுமீ 28உயில் காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற இந்துப் பெண் வித்யாசாலையின் வருஷ மஹோற்சவம் கொண்டாடப்பட்டது. கனம். P. S. சிவஸ்வாமி ஐயரவர்கள் அக்கிராஸனாதிபதியாக விருந்தார்கள். மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரும் வந்திருந்தார்கள். இந்துப் பெண்கள் பிராசீன ஆசாரங்களையும் சீலத்தையும் உறுதியாய்க் கைக்கொள்ளவும் அவர்களின் விவேக அபிவிருத்தி அதிகரிக்கவும் நவீன கல்வியை உட்கொள்ளவும் இந்த காஞ்சீபுரம் இந்துப்பெண் வித்யாசாலை தகுதியான கல்விச்சாலையென்று நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். பெண் கல்வி அவசியமென்றும் அது நம்முடைய பூர்வ மேம்பாடான விதிகளை ஒத்திருக்கவேண்டியதென்றும் அக்கல்வியின் அபிவிருத்தி குறைவாயிருக்கும் வரை தேசத்தின் அபிவிருத்தியானது தடைப்படுமென்றும் எல்லோருக்கும் தற்காலத்தில் தெரிந்திருந்தபோதிலும் அவ்விதக் கல்விச்சாலைகளை ஆதரிப்பதில் நம்முடைய ஜனங்களுக்கு விசேஷ ஊக்கம் இன்னும் ஏற்படவில்லை. அவ்வூக்கக் குறைவு மற்ற

ஊர்களில் இருப்பது போலவே காஞ்சீபுரத்திலு மிருக்கிறது என்று தோன்றுகிறது. இவ்விதமாக பிரயோஜனத்தைக் கொடுக்கும் அக் கல்விச்சாலைக்குத் தகுதியான கட்டிடம் இன்னும் அமைக்கப்படவில்லை.

* *

இந்தியாவில் ஸ்திரீகள் மேம்பாடு அடைவதற்கு உதாரணங்கள் இந்திய பூர்வ மத்திய கால சரித்திரங்களில் அநேகம் உளவாயினும், அவைகளைத் தற்காலத்தில்கைக்கொள்ளுமாறு அவர்களுக்கு கல்வி பயில்விக்கவேண்டியது அவசியமென்றும், புருஷனும் ஸ்திரீயும் இருவருமிருந்து காரியங்களில் ஒன்று சேர்ந்து அவைகளை நடத்துவது போல தேசத்திற்கு க்ஷேமகரமான பொதுக் காரியங்களிலும் ஒன்று சேர்ந்து நடத்த பிரயத்தனப்பட வேண்டியது தற்காலத்தில் அவசியமென்றும், புருஷனுக்கு அவ்வித காரியங்களில் உத்ஸாகத்தையும் விடாமுயற்சியையும் தைரியத்தையும் ஸ்திரீ தன்னுடைய விவேகத்தினாலும் புத்தியினாலும் ஸ்திரப்படுத்தக் கூடுமென்றும், அப்பேர்ப்பட்ட சக்திகள் பூர்வகாலம்போல இந்தக் காலத்திலும் இந்திய ஸ்திரீகளிடத்தில் அமைந்திருக்கின்றன வென்றும், ஆனால் அவைகள் வெளித்தோன்றவும் விகஸிக்கவும் அவர்களுக்குக் கல்விப்பயிற்சி அவசியமென்றும், இந்து ஸ்திரீகள் ஸநாதன தர்மத்திற்கும் அதின் ஒழுக்கத்திற்கும் ஆசாரத்திற்கும் ஆதாரமாக விருத்தலால் அக்கல்வியானது இந்து மதத்தில் சிரத்தையையும் சீலத்தில் பற்றுதலையும் உறுதிப்படுத்தத் தக்கதாயிருக்க வேண்டுமென்றும் இன்னும் பலவாறாக எடுத்துரைத்தனர்.

* *

5-வது கர்னாடக பிரஹ்மஞான சங்கமானது நாளிது ஷேப்பிரல் மீ 4உ பங்களூரில் கூடிற்று. மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் அக்கிராஸனம் வகித்தார்கள். அந்த காலத்தில் அவர்கள் செய்த உபந்நியாஸத்தில், பொதுநன்மையில் தன்னுடைய ஊக்கத்தை அச்சபையிலுள்ளோர் கொண்டாடினது அனுவசியமென்றும் ஒவ்வொருவரும் அவருடைய சுய நன்மையைக் கருதாமல் ஜய அபஜயங்களில் பற்றற்றவராய் அவருடைய சக்தி திரவியம் முயற்சி

இவைகளை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்து ஈசுவர கைங்கரியமாக பாவித்துப் பொது நன்மைக்காக உழைத்தால் ஈசுவரனுடைய சக்தியானது அவர் மூலமாய்ப் பிரகாசிக்குமென்றும்,

* * *

நம்முடைய வீட்டில் சூரியனுடைய வெளிச்சம் நுழைந்து பிரகாசிக்க வேண்டுமென்று நாம் விரும்பினால் அந்த வீட்டின் ஜன்னல் கதவுகளை திறப்பின் சூரியனது வெளிச்சம் அவ்வீட்டில் எங்கும் பரவுமென்றும், வீட்டிற்கு இயல்பாகவே சுயமாய் பிரகாசம் ஏற்பட்டு வில்லை யென்றும், அதுபோல நாம் நம்முடைய சுய நன்மையைப்பாராமல் பொதுஜன கைங்கரியம் செய்யுங்கால் லோக கர்த்தாவாகிய ஈசுவரனுடைய சக்தியானது நமக்கு கிடைக்கிறதென்றும் தான் கர்த்தா என்று எண்ணுகிறவன் மாயையின் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறானென்றும்,

* * *

தற்காலத்தில் இந்தியாவிலும் மேற்றிசை நாடுகளிலும் சமய நெறிகளினுடைய உண்மைகளை மூடி அவைகளினுடைய தத்வார்த்தங்களை மறைத்து ஒருவர்க்கொருவர் இருக்கவேண்டிய அன்பை அகற்றி துவேஷத்தை அதிகரித்து விபரீதத்தை உண்டு பண்ணின வெளித்தோற்றங்கள் கைவிடப்பட்டு வருகின்றன வென்றும், இப்போது ஆங்கிலேய தேசத்தில் அறிவிலும் தனத்திலும் ஞானத்திலும் மேன்மையை யடைந்தவர்கள் அவர்களுக்கு கீழாயுள்ளோரை எவ்விதமாக உதவி செய்து உயர்த்தலா மென்று யோசித்து முயற்சிக்கிறார்களென்றும், அவ்வேலையில் பிரஹ்மஞானசபை மெம்பர்கள் முன் நிற்கின்றார்க ளென்றும்,

* * *

அதேவித ஊக்கம் இந்தியாவிலும் பரவிக்கொண்டு வருகிறதென்றும், அநேக தனவான்கள் தங்களுடைய சௌகரியத்தை கவனித்துக்கொண்டு உல்லாசமாய்க் காலம் கடத்துவதை ஒழித்து Co-operative Movement முதலான பொது விஷயங்களைப் பரவச் செய்வதில் கிராமம் தோறும் சென்று வேலை செய்து வருகிறார்களென்றும், கிராமத்தில் முன்காலம் போல் பஞ்சாயத்து ஏற்பட்டு

கிராமத்தின்க்ஷேமத்தை கருதி இலாகா சுய அரசாட்சி (Local Self-Government) யின் விதையை கிராமங்களில் விதைத்தால் மட்டும் தேசமானது க்ஷேமத்தை யடையும் என்றும், நம்முடைய தேசத்தின் பூர்விகசரித்திரத்தின் மீதும் பூர்வீக நாகரிகத்தின் பேரிலும் முன் காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்த பெரியோர்களிடத்திலும் நமக்கு ஒரு பக்தியும் விசுவாஸமும் கௌரவமும் ஏற்பட்டாலொழிய நம்முடைய நாடானது உயர்வையும் மேன்மையையும் அடையமாட்டாதென்றும் அவ்வித பக்தியையும் விசுவாசத்தையும கௌரவத்தையும் அடிப்படையாக வைத்து நம்முடைய நாட்டின் வருங்கால மேன்மையை மேல் கட்டிடமாக அமைக்க வேண்டுமென்றும்,

* * *

பிரஹ்மக்ஞான சபையின்மெம்பர்கள்ஜனஸமூகத்தைத்துறந்து தங்களுடையசுயநன்மைக்காகத்தனியிடங்களில் சாஸ்திரங்கள்கற்று யோகாப்பியாஸம் செய்கிறவர்க ளல்லரென்றும், அவர்கள் ஜனஸமூகத்தின் நடுவின் நின்று ஜீனங்களைச் சேவை செய்வதையே முதன்மையான கைங்கரியமாகக்கைக்கொண்டிருக்கிறார்களென்றும், பிரஹ்மக்ஞான சபையின் மறைந்திருக்கிற ஸ்தாபகர்களில் ஒருவராகிய மஹரிஷி யொருவர் முப்பது வருஷங்களுக்கு முன் திருவாய் மலர்ந்தருளியதுபோலவே,இப்பிரஹ்மக்ஞானசபையானது எவ்வூரில் சிரத்தையோடு வேலை செய்துகொண்டு வருகிறதோ அவ்வூரில் அக்ஞானமென்ற அந்தகாரமும் தாரித்திரியமும் துன்பமும் வெளிப்படையாக குறைவுபடு மென்றும்,

* * *

ஆங்கிலேய தேசத்தில் இந்தியாவிலிருந்து கல்வி கற்கச்செல்லும் வாலிபர்களுக்கு உதவியாயிருந்து அவர்களை அவ்வன்யதேசத்தில் அல்பசகவாஸத்தை நாடாமலும் கௌரவமான சிநேகிதர்களை யடையவும் உதவிபுரிய கனவான்களால் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு Lord Chancellor என்றமந்திரியும் மற்றும் அநேக நியாயாதிபதிகளும் மெம்பர்களென்றும், அதில் பிரஹ்மக்ஞான அங்கத்தினர் மெம்பர்களாக விருக்கிறார்களென்றும்,

இந்தியாவும், இங்கிலாந்தும் சமமான பாந்தவ்பத்தில் ஒன்று சேர வேண்டுமென்றும் சரீரம் வெண்மையா யிருத்தலினாலாவது அல்லது கருமை நிறத்தை யடைந்திருத்தலினாலாவது மனுஷதார தம்மியம் ஏற்படக் கூடியதில்லை யென்றும் இவ்வித்தியாஸங்கள் சீதள உஷ்ண பிரதேசங்களில் வசித்தலால் ஏற்படுகின்றன ஒவ்வொன்றும் யோக்கிதையும் நற்குணமுமே மனிதர்களுக்குள் உண்மையான தாரதம்மியங்களை ஏற்படுத்துகின்றன வென்றும் பல ஜாதியார்களும் சமத்துவமான மரியாதையுடன் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய தென்றும், தத்துவஞான சம்பந்தமாய் மேற்றிசையோரிடமிருந்து இந்தியர்கள் தெரிந்து கொள்ளவேண்டியது யாதொன்றுமில்லை யென்றும், உலகத்திலுள்ள எல்லா பரமாசாரியர்களும் கீழ் தேசங்களினின்றே தோன்றி யிருக்கிறார்களென்றும்,

வடஇந்தியாவில் இந்துக்கள் இந்து சர்வகலா சாலை ஏற்படுத்த சித்தமாயிருப்பதுபோல் தென்இந்தியாவிலும் அவ்வித கலாசாலை ஏற்பட வேண்டியது அவசிய மென்றும் அதற்கு ஆரம்பமாக சென்னை பச்சையப்ப முதலியார் வித்தியாசாலையை பலப்படுத்த வேண்டுமென்றும் அதில் மாணுக்கர்கள் வசித்து கல்வி கற்றுக்கொள்வதற்காக ஒரு Residential College க்கு சென்னை கவர்னரவர்களால் அஸ்திவாரம் போடப்பட்ட காலத்தில் தான் ஒரு லக்ஷ ரூபாய் வருவித்துக் கொடுப்பதாய் வாக்கு அளித்திருப்பதாயும் நிறைவேற்றுவதற்கு தன்னிடத்தில் அபிமானமுள்ளவர்கள் உதவி புரிய வேண்டுமென்றும்,

அந்த பிரஹ்மஞான சங்கத்திற்கு வந்து போகும் ஒவ்வொருவரும் தாங்கள் தங்களுடைய ஜனன பூமியாகிய மாதாவுக்கு மேற்சொல்லிய பல விதங்களால் கைங்கரியம் புரிவதற்கு இந்த புண்ணிய பூமியாகிய ஆர்யா வர்த்தத்தில் பிறப்பதற்கு பாக்கியமில்லாத தன்னைக்காட்டிலும் அநேகமடங்கு ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் அவரவர்களுடைய உடல் பொருள் ஆவி இவைகளை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்திக்கூறினர்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

அஸ்ஸிஸி தேசத்து ஸெண்ட் பிரான்ஸிஸ் என்ற ஞானியார்.

இவர் ஒரு கிறிஸ்தவ மடாதிபதி. இவர் ஒரு காலை, மடத்தின் மேல் தளத்திலிருந்து கீழிறங்கி வந்து தம் சிஷ்யராகிய ஒரு ஸந்நியாஸியை, அவருடைய தோள் மேல் கையை வைத்து "ஸஹோதர, நாமிருவரும் பட்டணத்துக்குள் போய்ப் பிரசங்கம் செய்வோம், வாரும்" என்றழைத்தார். அவரும் இணங்கி உடனே இருவரும் பேசிக்கொண்டே புறப்பட்டார்கள். பெரிய ராஜ வீதிகள் வழியாகவும் சிறு சந்துகள் வழியாகவு மெல்லாம் போய்ப் பிறகு பட்டணத்துக்கு வெளியேயும் அதற்கப்பாலிருந்த ஒரு கிராமம் வரைக்கும் கூட போய் விட்டார்கள். பிரஸங்கம் ஒன்றும் நடத்தவில்லை. இந்த விருத்தர் தம் சிஷ்யரைப், பழையபடியும் பேசிக்கொண்டே வந்து, மடத்திற் கொண்டு வந்து சேர்த்தார்.

சிஷ்யர்:—ஆச்சரியத்துடன் "ஹே! குருநாதா! நாம் எப்போது பிரஸங்கஞ் செய்வது?" என்று கேட்டார்.

குரு:—"குழந்தாய்! நாம் தான் பிரஸங்கம் செய்து விட்டோமே. நாம் நடந்து போகையிலேயே நம்மை எல்லா ஜனங்களும் கூர்ந்து கவனித்தார்கள். அப்போதே பிரஸங்கம் ஆகிவிட்டது. நம்முடைய யோக்யதையை அவர்கள் நன்கு கவனித்திருக்கிறார்கள். சிஷ்ய! இன்று காலை நம்முடைய பிரஸங்கம் நன்றாய் நிறைவேறியது. பிரஸங்கம் என்பது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெருங் கூட்டத்திற்கு மத்தியில் பெரிய மேடையில் எழுந்து நின்று, கைகளைத் தூக்கி உரக்கக் கூவுவது தான் எனப் பொருள் கொள்ளற்க. பிரதி நிமிஷமும் நாம் பிறருடன் பழகும் முறைமையில் பிறருக்கு நல்ல வழக்கங்களை நம்முடைய நடபடிக்கையாலேயே நடித்துக் காட்டலாம். இப்படிச் செய்வது தான் பெரிய பிரஸங்கமாகும்."

ஆகையால், நாம் இக்கதையால் அறிந்து கொள்ளும் படிப்பினை யென்ன வெனின், இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் நம்மில் பக்தி, ஸ்தைர்யம், சாந்தம் என்ற முக்குணங்களையும் அமையப் பெற்று, நம்முடைய அநுஷ்டானமாகிய பிரஸங்கத்தின் மூலமாய் பிறரை நல்வழிப்படுத்துவோமாக.

B. S. R. சுப்பிரமணியன்.

---

* Translated from the "Heruld of the star".

ஆத்மபோதம்.

(376-ம் பக்கத் தொடர்ச்சி.)

சச்சிதாநந்த யோகீந்திரர் :—சிஷ்யர்காள்! நீங்களெல்லோரும் நேற்று சூரியாஸ்தமன சமயத்தில், இன்னும் ஏதோ விளங்கச் சொல்லவேணுமாய் மிக்க வணக்கத்துடன் கேட்டுக்கொண்டீர்களே; அதை இப்பொழுது யான் ஜபதபாத்யநுஷ்டானங்களை முறையே முடித்துச் சாவகாசமாயிருக்கிறபடியால், சந்தேகமறக் கேட்டுத் தெளியுங்கள்.

தத்வராயன் :—ஸ்ரீ ஹ தபோநிதே! அபேத, அத்வைத, அப்ரமேய, அவாங்மனோகோசரமாகிய பரப்பிரஹ்மத்தை, தியானத்தினாலன்றி வேறெவ்வித சாதநங்களாலும் ஒருவன் அடைய முடியாதென்றும் அங்ஙனமடைய பக்தி, சிரத்தை, இன்றியமையாதவையென்றும், தாங்கள் கூறக்கேட்டோமாயினும், அவைகளின் தத்வார்த்தங்களைத் தாங்கள் போதிக்கும் வண்ணம் சிற்றறிவுள்ள நாங்களே உத்கிரந்தங்களை* கற்றுத் தெளியசக்தியற்றவர்களாயிருப்பதினிமித்தம், கருணைக்கடலாகிய தாங்கள் எளியேம்பேரிற் கிருபைகூர்ந்து அநுக்கிரஹிக்கக் கோருகிறோம்.

யோகி :—எனது அருமைப்புதல்வர்களே, உங்களைப்போன்ற உத்தம சிஷ்யர்களை யடைந்த என் பாக்கியமே பாக்கியம்.

சுலோகம்.

[illegible]

[illegible]

என்னும் சுலோகத்தின் தாத்பரியத்திற்கேற்ப உங்களுடைய அறிவிற்குமன்பிற்கும் மிகவும் மெச்சினேன். பக்தியின் விசேஷத்தைப் பற்றி மஹா உத்தம யோகிகளாகிய பிரஹ்லாதர், பதஞ்சலி, நாரதர், சங்கரர் முதலிய பெரியோர்கள் ஸவிஸ்தாரமாய்க் கூறியிருப்பினும் நீங்கள் கூறிய வண்ணம் அநேக விஷயங்கள் இலை மறை

* உத்கிரந்தங்கள்=மேற்கோள்கள், தத்துவ நூல்கள்.

காய் போற் புதை பொருளாகவே யிருக்குமாதலால், அப்புதை பொருள்களையும் உங்கள் கைப்பொருளாக்குகிறேன். நன்றாய்க் கவனியுங்கள்.

பக்தி - பரா, அபரா, அல்லது உண்மை, போலி - என இருவகைப்படும். ஒருவன் கடைத்தேற பராபக்தி, அபராபக்தி என்பன விரண்டும் முக்கியமானவையென்றும், அப்பியாச மார்க்கத்தின் முடிவிற்றான் உண்மையான பக்தி ஜனிக்குமென்றும், பெரியோர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காட்டியிருக்கிறார்கள்.

முன்னொரு காலத்தில் ஹிரண்யகசிபு, தன் புத்திரன் பிரஹ்லாதனைப் பலவிதமாய்த் துன்பப்படுத்தித் தன்னையே தெய்வமாகக் கொண்டாடும்படி வற்புறுத்தியும் அதனைக் கேளாமல் ஆதிபகவனையே உண்மையான தெய்வமெனக்கருதி ஆராதனைசெய்துவரும் மைந்தனைப் பின்வருமாறு கேட்கத்தொடங்கினான்.

ஹிரண்ய கசிபு :—ஹே பிரஹ்லாதா! இந்திராதி தேவர்களும், மும்மூர்த்திகளும் மற்றுமுள்ள மகரிஷிக்கூட்டங்களும் என் பிரதாபத்தைக் கேட்டஞ்சி என்னைக் காணுதற்குக்கூட நாணமுற்றிருப்பது நீ அறியாததா? அப்படியிருக்க நீ என் வயிற்றிற் பிறந்திருந்தும் இவ்விதம் என் வைரியைத் தெய்மெனக்கொண்டாடுவதேன்? சீக்கிரம் சொல், என,

பிரஹ்லாதன் :—ஐயனே, தாங்கள் சொல்வதெல்லாம் சரியே. ஆயினும் நான் பிரதிதினமும் தொண்டு செய்யும் தெய்வத்திற் கன்னியமாக ஒரு வஸ்து இருப்பதாகத் தெரியவில்லையே. தங்களிலும் தங்கள் ஆயுதங்களிலும், இன்னும் உலகத்தேயிருக்கும் சகலஜீவகோடிகளிலும் ஸ்தாவரங்களிலும் விளங்கும் சக்தியவனே. ஆதலால் அவனுக்கு வேறாக ஒரு பதார்த்தம் இருந்தாலன்றோ நான் அதை வணங்க வேண்டும்? ஐயனே! தாங்களும் அவ்விதமே யநுஷ்டித்தால் எக்காலத்து மழியாத பேராநந்தத்தை யடைவீர்கள் என்று பரமசாந்தத்துடன் உத்தரமளித்தான். அதற்கு,

ஹிரண்ய :—சபாஷ்! சபாஷ்! புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? ஹே சுக்கிராசார்! பிரஹ்லாதன் சொல்வதைக் கேட்டீரா?

நல்லது இன்னும் பார்ப்போம். ஹே! பிரஹ்லாதா! நீ மிகவும் சங்க்ஷேபமா* யுபதேசிக்கிறாய். இன்னும் சற்று விளங்கச்சொல். ஆதியில் குமரக்கடவுள் சாம்பமூர்த்திக்குபதேசித்த ஆச்சரியத்தி லும் இது வெகு விநோதமாயிருக்கிறது என்று கோஷிக்கவே,

பிரஹ்லாதன்:—ஹே! அஸுரவர்ய! நான் அப்பியஸித்த மார்க்கத்தையும் அடைந்த சுகத்தையும் சொல்லுகிறேன். கிருபை யுடன் செவிசாய்க்கப் பிரார்த்திக்கிறேன் என்று அடியில் வரும் ஒரே பத்யத்தில் வேதாந்த சாரத்தை எடுத்துரைத்தான்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

† கருமத்திரயங்களை—மனது, வாக்கு, காயங்களாற் செய்யப்படும் காரியங்களை அடுப்புக்கட்டிகளாகவைத்து காமாதி அரிஷட்வர்க்கங் களை விறகுகளாகப்போட்டு, ஞானம் என்னும் அக்கினியால் நன்றாக எரித்து, மனமென்னும்பாத்திரத்தை அவ்வடுப்பின்மேல் வைத்து, வாஸ்தவ பக்தி யென்னும் பாலை வார்த்துக் காய்ச்சி, சத்ஸஹவாஸம் என்னும் உறைமோர் வார்த்து, காலமென்னுமிராத்திரியைக்கழித்து பிறகு மநநம் என்னும் மத்தினாற்கடைந்து, ஆனந்தமென்னும்

* சங்க்ஷேபமாய்—சுருக்கமாய்.

† கருமத்திரயங்கள்—திரிகரணங்களின் செயல்கள், திரிகரணங்கள்-மனோ வாக்கு, காயம்.

வெண்ணெயை யெடுத்து, அக்ஞானமாகிற பூனை அவ்வெண்ணெயைக் கவராமற்தடிந்து இனியும் மறுஜநநமென்னும் பசி யுண்டாகா வண்ணஞ்செய்யும் அத்புதசக்திவாய்ந்தது, நான் அப்பியஸிக்கும் மேற்சொல்லியமார்க்கம். இதற்குமேல் ஒன்றும் சொல்லத்தெரியவில்லை யென்று அசுர சிரேஷ்டனாகிய தன் பிதாவுக்கு பிரஹ்லாதன் உத்தரமளித்தான்.

தத்வ:—ஹே! குருநாதா! மேலே சொல்லிய பத்தியத்தின் தத்வார்த்தமானது நன்கு விளங்காது குப்தமாய்ச்* சொல்லப்பட்டிருக்கிறபடியால், பூர்வம்† தாங்கள் திருக்குறளின் தத்வார்த்தத்தை விளங்கச் சொல்லியதுபோல், இதையும் தெளிவாயுபதேசிக்கப் பிரார்த்திக்கிறோம்.

யோகி:—எனதருமைக் கண்மணிகளே! இந்தப் பத்யத்தின் தத்வார்த்தமே பிரஹ்லாதன் உரைத்தவக்காலத்தும், ஹிரண்ணியனுக்கு நன்றாகப் புலப்படவில்லை. சுக்கிரபகவான் சவிஸ்தாரமா யவனுக் கெடுத்துரைக்கலானார். ஆகவே அவர் சொல்லிய வண்ணம் இப்பொழுது உங்களுக்கும் விளங்க உணர்த்துகிறேன். நன்கே கவனியுங்கள். இதுவே ஒருவன் உண்மையில் சிரவணம் என்னும் முதலாவது படியை§ ஏறுங்காலம். இதுவே மநநம் என்னும் இரண்டாவது படியை ஏற முக்கியகாரணம். ஒருவன் மநநம்செய்ய, சிரவணஞ் செய்த விஷயங்களின் தத்வார்த்தங்களை சத்சகவாசத்தினால் நேருக்கு நேராகத்தெரிந்து கொள்ளவேண்டியது இன்றியமையாத சாதனமாகையால் நீங்கள் சந்தேகமறக் கவனித்துணரவேண்டும்.

கருமத்திரயங்களை அடைப்புக்கட்டிகளாக வைத்தலாவது:—மனது, வாக்கு, காயங்களாற் செய்யப்படுங் காரியங்களாகிற கருமத்திரயங்களை, யாதொருவித சைதன்னியமும், விவகரிக்குந் தன்மையுமற்ற அடைப்புக்கட்டிகளைப்போலாக்குதல். அதாவது ஒருவன் மேன்மார்க்கத்தை யப்பியசிக்க மேற்சொல்லிய கர்மங்களின் வசியம்‡ முதற்சாதனமென்பதுகருத்து. இதுவே வைராக்கியத்தின் ஆரம்பம்.

* குப்தம்—ரகசியம். † பூர்வம்—முன்பு. § படிகள் மூன்று—சிரவணம், மநநம், நிதித்தியாசனம். சிரவணம், மநநத்திற்கும், இவை இரண்டும் நிதித்தியாசனத்துக்கும் வழிகளாம்.

‡ வசியம் - அடக்குதல், ஜயித்தல். சாதனம்-ஹேது.

காமாதி அரிஷட்வர்க்கங்களை விறகுகளாகப் போதேலாவது:—காமக்குரோத, லோப, மோஹ, மத, மிற்சரியமென்னும், காமாதிகளுக்கு ஜீவாதாரமான விஷயாஸக்தியைக் கொன்று கேவலம் ஜீவனற்ற மரக்கட்டைபோற் செய்தல் என்பது கருத்து. ஒருவன் கட்டைபோற் கிடந்தான் என்றவிடத்து அவனது ஜீவனற்ற நிலையைக் குறித்தல் காண்க. இதுவே இரண்டாவது சாதனம்.

ஞானமென்னும் அக்கினியால் நன்ருக எரித்தலாவது:—மேலே சொல்லிய விஷயாஸக்தியை ஞானத்தினும் கொல்லுதல் என்பது கருத்து.

குறிப்பு:—ஞானத்தினலன்றி விஷயாஸக்தியைக் கொல்லமுடியாதென்றும், விஷயாஸக்தியின்* சேஷம் முழுதுமற்ற நிலையே ஞான உற்பத்திக்குக்† காரணமென்றும் அறிக.

இதுவே மூன்ருவது சாதனம்,

மனதென்னும் பாத்திரத்தை யவ்வடுப்பின்மேல் வைத்தலாவது:—இதற்குமுன் மனதாவது காமக்குரோதாதிகளால் இழுக்கப்பட்டு, யாதொரு பதார்த்தத்தையும் வஹித்துக்கொள்ளச்‡ சக்தியற்ற சொரூபமடைந்திருந்ததையும், தற்காலம், அதாவது ஞானம் வந்து காமாதிகளினின்று விடுபட்ட காலத்தில், சொரூபத்தை அடைந்திருக்கிறதையும் காட்டுகிறது.

குறிப்பு:—ஞானம் வந்தபிறகுதான் மனதானது ஒருமுகப்படுமென்றும், ரப்பரினுற் செய்யப்பட்ட ஒரு கிண்ணமானது நாலா பக்கங்களிலும் இழுக்கப்பட்ட காலத்தில் தன் சொரூபம் இழத்தலையும், அவற்றினின்று விடுபட்ட காலத்தில் தன் சொரூபத்தையடைதலையும் அறிக.

இதுவே நான்காவது சாதனம்.

பிறகு வாஸ்தவ பக்தியென்னும் பாலைவார்த்துக்காய்ச்சலாவது:-வாஸ்தவபக்தி பால்போன்றதென்றும், அதை ஞானமென்னும் அக்கினி ஜலத்தைப் போக்கிக் கெட்டிப்படுத்துகிறதென்றும் கருத்து.

---

* விஷயாஸக்தி - விஷயப்பற்று.

† உற்பத்தி - உண்டாதல், ‡ வஹித்து - தாங்கி,

குறிப்பு:—மனது ஒருமுகப்பட்டபிறகு தான் உண்மையான பக்தி வருமென்றும், இமீதி பக்திதான் விஷயாஸக்தியுடன் கலந்திருந்தகாலத்து காமாதிகளாயிருந்தனவென்றும், காமாதிகளாயிருந்த காலத்து ஞானம் எரிக்கச் சக்தி வாய்ந்ததென்றும், அசுத்தம் நீங்கி வாஸ்தவ பக்தியானபின் ஞானம் கெட்டியாக்கத்தான் சக்திவாய்ந்ததென்றும் அறிக.

இதுவே ஐந்தாவது சாதனம்.

ஸத்ஸங்கவாஸமென்னும் உறைமோர் வார்த்தலாவது:—ஞானத்தினால் எவ்வளவுதான் கெட்டிப்படுத்தப்பட்டாலும் பக்தியாகிற பாலின் ஜலத்தன்மை முற்றிலும் மாறாதாகையால், பெரியோர்களின் சேர்க்கை மட்டுமே அவ்விதஞ் செய்யச் சக்தி வாய்ந்ததென்பது கருத்து.

குறிப்பு:—உண்மையான பக்தியுண்டானபிறகு பெரியோர்கள் தாமே தேடிவந்து தரிசனம் கொடுப்பார்களென்றும், அதுவே உள்ளபடி பக்தியைத் திடப்படுத்துமென்று மறிக.

இதுவே ஆறாவது சாதனம்.

காலம் என்னும் இராத்திரியைக் கழித்தலாவது:—ஆகாமிய, சஞ்சித, பிராரப்தம் என்னும் மூன்று கருமங்களிலும் விலக்கமுடியாத பிராரப்தத்தை அநுபவித்தல் என்பது கருத்து.

𑌨𑌾𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌲𑍍𑌪𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑍈𑌰𑌪𑌿।

என்னும் வாக்கியத்தின் தாத்பரியத்தைப் பார்க்க.

குறிப்பு:—ஞானம் வந்தவுடன், ஆகாமியம், சஞ்சிதமென்னும் இரண்டு கருமங்களும் நசித்துப்போமென்றும், எஞ்சி நின்றது பிராரப்தமென்றும் அறிக.

மநநம் என்னும் மத்தினாற் கடைதலாவது:—ஒருவன் எவ்வளவுதான் கற்கினும் கேட்கினும், அவை சிந்தித்தலாலன்றிப் பயன்படாது என்பது கருத்து.

குறிப்பு:—சாதுக்களுடைய சேர்க்கையே ஒருவன் தியானத்தில் தேர்ச்சியடைய முக்கிய காரணமென்றறிக.

இதுவே ஏழாவது சாதனம்.

ஆநந்தமென்னும் வெண்ணெயை எடுத்தலாவது:—மஹத்தான ஆநந்தமாகிற வெண்ணெய் என்பது கருத்து.

குறிப்பு:—இவ்விதம் அப்பியசிப்பவன் ஆநந்தமயகோசவாஸியாவானென்றும்,* இதுவே சாலோகமென்று சொல்லப்படும் உயர்நல† மென்றுமறிக.

இதுவே எட்டாவது சாதனம்.

அக்ஞானமாகிற பூனை அவ்வெண்ணெயைக் கவராமற் கடிதலாவது:—அக்ஞானமானது கேவலம் நிழல்போலத் தொடர்ந்துவருமென்றும், மூன்றாவது உயர்நலமாகிய அருள்கிடைக்குமட்டும் அது ஜீவித்திருக்குமென்றும் அறிக.

இதுவே விசுவாமித்திராதி மஹரிஷிகள் கோரதபசினின்று நழுவக் காரணம்.

இனியும் ஜநநமென்னும் பசியுண்டாகாவண்ணமாவது:—ஜநநமரணமென்னும் துக்கத்திலிருந்து விடுபடுதல் என்பது கருத்து.

குறிப்பு:—பசியென்பது துக்கஹேதுவாகையால் அதனுக்கொப்பிடப்பட்டிருக்கிறதென்றும் இதுவே மூன்றாவது உயர்நலமென்றுமறிக.

ஹே! சிஷ்யர்காள்! ஒருவன் முக்தியை அடையவேண்டுமானால், கருமத்திரயங்களைத் தன் வசமாக்கி, தான் காமாதிகள் வழிச் செல்லாது, ஞானத்தையடைந்து, மனத்தை ஒருமுகப்படுத்தி, வாஸ்தவ பக்தியையடைந்து, ஸத்ஸகவாஸம் செய்து, தான் கற்ற

---

* பஞ்சகோசங்களாவன:—அந்நமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம்.

† உயர்நலங்கள் - சாலோக, சாரூப, சாமீப, சாயுஜ்யங்கள். சோர - கடமையான,

தும் கேட்டதுமான பொருளை இடைவிடாது சிந்தித்தலே என்பது உங்களுக்கு நன்கு விளங்குமேன நம்புகிறேன்.

இனியும் மஹானுகிய லோககுரு சங்கரரும் இன்னும் மற்றவர்களும், இதே பக்தியைப்பற்றிச் சொல்லியிருக்கும் விஷயங்களையும் தெளிவாய்க் கேட்க நீங்கள் மிக்க அவாக்கொண்டிருக்கிறீர்களாயினும் இப்பொழுது ஏகாந்தமாயிருக்க விருப்பமுற்றிருப்பதால் பிறகு கேட்பீர்கள். துவாரத்தில்* ஜாக்கிரதையாயிருந்து யாரும் வராது கவனிப்பீர்கள்.

(இன்னும்வரும்.)

யோகி சுந்தரராஜம்.

நன்மொழி.

15. ஸ்வர்க்காதி போகங்களை யிச்சித்து ஸத்கர்மங்களில் பிரவிர்த்திக்காதே. பிரஹ்மாத்மைக்யத்தை யுணர்ந்து ஸத்கர்மங்களில் பிரவிர்த்திஎற்படல் வேண்டும். பலனை உத்தேசியாமல் தர்மத்தைக் கடைப்பிடி.

16. நம்முடைய தீவ்ர சிந்தனையின் பிரகாரந்தான் நாம் ஆகிறோம். ஆகையால் நாம் நற்சிந்தனைகளையே எப்போதும் நினைக்கவேண்டும். அப்போதுதான் நாம் நல்லவர்களாவோம். இவ்விரகவியந்தான் நீதிநெறியில் முதன்மையான உபதேசம்.

17. உலகில் ஸாதாரணமாக நல்லவர்கள் அநேகரும் தற்புகழ்ச்சி என்ற ஒரு குணத்தை உடையவர்களாயிருப்பதனுல் 'முகஸ்துதியம்' என்ற பொய்நாணயம் அவர்களுடைய நாணயச் சாலையினின்று வெளியுலாவுகிறது.

18. சிற்றறிவுதான் துர்க்குணமான பிடிவாதத்திற்குக் காரணம். நமது ஸ்தூலப்பார்வைக்கு அகோசரமாயும், ஆனுல் வாஸ்தவமாயும் உள்ள விஷயங்களின்மேல் நமக்கு நிஜமான நம்பிக்கை விழுகிறதில்லை.

19. முன் செய்த தீவினைகளைப் பற்றி நினைத்து நினைத்து நெஞ்சமுருகி அகங்குழைவார்க்கே சித்தசுத்தியானது எற்பட்டு ஞானேதயம் வித்திக்கும்.

---

* துவாரம் - வாயில்.

435

பிரஹ்மஞான தர்சனம் (பாலபாடம்.)

10-வது அத்தியாயம்.

இரசவாதம்—(Spiritual Alchemy.)

(366-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாமெல்லோரும் பள்ளிக்கூடத்துக்குத் திரும்பி வந்திருக்கிறோம். நம்மில் ஒவ்வொருவரும் இரண்டுவித வேலைகளில் பிரவிர்த்தித்துக் கொண்டிருக்கிறோம். அதாவது, விதைக்கிறது. அநுபவிக்கிறது. முந்தின ஜன்மத்தின் கர்ம பலன்களை யநுபவிப்பதும் வரப்போகிற ஜன்மத்துக்கு சந்தோஷம், வியஸனம், இன்பம், துன்பமென்ற வித்துக்களை விதைப்பதுமான பிரவிர்த்தியாம்.

பாரார்த்த இரசவாத ஞானத்தினால் (Spiritual Alchemy) நாம் எவ்விதம் ஒடுக்கமான மார்க்கத்தில் நடந்து குறுகலான வாசலைக் கடந்து வெற்றியடைகிற சொற்பமான ஜனங்களுடன் சேருவோமென்பதை கவனித்துப் பார்ப்போம்.

நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் கெடுதலை நன்மையாகவும் அசுத்தத்தைச் சுத்தமாகவும் மாற்ற வேண்டிய முக்கியமான மூன்று விஷயங்களிருக்கின்றன:—(1) எண்ணங்கள்; (2) இச்சைகள்; (3) செய்கைகள்.

எண்ணங்களினால் ஒழுக்கமுண்டாகிறது. அவ்வொழுக்கத்திற்குத் தக்கபடி இவ்வுலகத்திலும் ஸ்வர்க்கத்திலும் அடுத்த ஜன்மத்திலும் நமக்குத் தோழர்கள் ஏற்படுகிறார்கள்.

இச்சைகளினால் தருணங்களும் அப்பியாசங்களும் ஏற்படுகின்றன.

செய்கைகளினால் நம்மைச் சுற்றி யிருக்கிற நிலைமைகள் ஏற்படுகின்றன. அதாவது, நாம் குடியிருக்கும் வீடு, பட்டணம், தேசம், மேலான அல்லது தாழ்ந்த சகவாச நிலைமை, அதினால் நாம் செய்ய வேண்டிய வேலைகள், அவைகளின் பலனான தாத்திரம் அல்லது ஐசுவரியம் இவைகளாம்.

எவ்விதம் நடக்க வேண்டியதென்பதை நாம் தெரிந்து எப்படி இச்சிக்கிறோமோ அப்படி யாவோம். நம்முடைய செய்கைகளின் பயன்களினின்றும் தப்புவதற்கு மார்க்க மில்லை.

கெட்ட எண்ணங்கள் நம்மை மேற்போகாமல் தடை செய்கின்றன. விகாச முறையிற் பிரதி பந்தகங்களா யிருக்கின்றன. அதாவது ஈசுவரத் தன்மையுள்ள நல்ல வித்துக்களை நமக்குள் வளரவிடாமல் தடை செய்கின்றன. தவிரவும் கெட்ட எண்ணங்கள் நம்முடைய மூளைகளினின்றும் வெளியேறி இதரஜனங்களுக்கும் பாதகத்தைச் செய்கின்றன.

நம்முடைய எண்ணங்களை நாம் நிறுத்த முடியாது. எப்போதும் எண்ணங்கள் இருந்து கொண்டேயிருக்கும். அவைகளை நாம் நல்லெண்ணங்களாகவே வகிக்கலாம். ஒரு கெட்ட எண்ணம் நமக்குள் உண்டாகும் போது அதற்கு எதிரிடையான நல்ல எண்ணத்தைப் பற்றி நினைத்து அதனால் நம்முடைய மனத்தை நிரப்புவோமாகில் கெட்ட எண்ணம் தங்குவதற்கு இடமுண்டாக மாட்டாது.

குரூரமான எண்ணம் உன் மனதி லுதிக்குமாகில் அன்புள்ள எண்ணத்தைப் பற்றி நினைக்க முயற்சிசெய். இவ்விரண்டு எண்ணங்களும் ஒத்து வசிக்க முடியாது. கெட்ட எண்ணத்தை விட நல்ல எண்ணம் அதிக பலமுள்ளதாகையால் கெட்டதைத் துரத்திவிடும். அல்லது அதை நல்லதாக மாற்றும். இப்படிச் செய்வாயாகில் பாரார்த்த இரச வாதத்திற் கொஞ்சம் செய்தவனாக விருப்பாய்.

ஒரு குறிப்பான மனிதனைப் பற்றி பக்ஷமுடன் நினைப்பது கடினமென்று உனக்குத் தோன்றினால் வேறு விதத்தில் நீ யவனுக்குதவி செய்யலாம். எவர்களிடத்தில் நாம் பக்ஷமா யிருக்கிறோமோ அவர்களைக் கடைசியில் நேசிக்கிறோம். நம்முடைய எண்ணங்களைப் போலவே நாமும் ஆகிறோம். இவ்விதம் எண்ணங்களினால் ஒழுக்கம் உண்டாகின்றது.

உன்னுடைய எண்ணங்கள் உன்னிடமிருந்து வெளியிற் போய் பிறரிடம் பிரவேசித்து இவ்வித எண்ணங்களை யுண்டுபண்ணி அவர்களை உனக்குத் தோழர்களாகச் செய்கின்றன. உன்னுடைய எண்ணம் கெடுதலாயிருந்தால் அது எவர்களிடம் பிரவேசித்ததோ அவர்களை முன்னினும் அதிக கெட்டவர்களாகச் செய்யும். பிற்பாடு

அவர்கள் உனக்குத் தோழர்களாவார்கள். ஏனெனில் "மூர்க்கனை மூர்க்கர் முகப்பர்" என்ற வசனப்படி அவர்களுடைய ஸ்வபாவம் உன்னுடைய ஸ்வபாவத்துக்கு ஒருவாறு ஒத்தது. இப்படியவர்கள் உனக்குத் தோழர்களாவதற்கு வேறொரு முகாந்திரம் யாதெனில் மேற்கண்ட விதம் அவர்களுக்கு நீ கெடுதி செய்த பிற்பாடு அவர்களுக்கு நீ உதவி செய்ய ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்கிறது.

நம்முடைய மனதுகள் கெட்ட இச்சைகளால் நிறைந்திருக்கக் கூடாது. நன்மையும் பிறருக்கு உபகாரமுமுள்ள இச்சைகளால் நிறைந்திருக்க வேண்டும். கெட்ட இச்சைகள் நம்மை மேற்போகாமல் தடுக்கும். அவைகளை நாம் நல்ல இச்சைகளாக மாற்றவேண்டும். அவவிதம் செய்யாவிடின் அவைகள் கெட்ட வழக்கங்களாக ஏற்பட்டு கெட்ட செய்கைகளைச் செய்யும்படியான சந்தர்ப்பங்களைக் கொடுக்கும். எண்ணங்களைப் போலவே நம்முடைய இச்சைகளும் நம்மோடு கூடவேயிருக்கின்றன.

பிறருக்குச் சொந்தமான பொருளை இச்சிக்க நீ பிடிவாதஞ் செய்தால் உன்னுடைய இச்சையானது, நீ விரும்புகிற பொருளுக்குச் சமீபத்தில் உன்னைக் கொண்டுபோம். ஒரு நாள் நீ யதை எடுத்து திருடனாவாய்.

ஆத்மார்த்தமும் பரார்த்தமுமான நல்ல பொருள்களையே நீ இச்சிக்கவேண்டியது. ஏனெனில் அவைகள் உன்னை பரோபகாரியாகவும் நீ போகுமிட மெல்லாம் அனுக்கிரகம் பெறக்கூடியவனாகவும் செய்யும். உன்னிச்சைகளைச் சோதித்துப் பார். அவைகள் பரோபகாரமுள்ளவைகளா யிருந்தால் அவைகளைவைத்துக்கொண்டு உபயோகிக்க வேண்டும். அப்பால் உன்னுடைய கீழான இச்சைகளெல்லாம் வர வர அவைகளுடைய ஸ்வபாவங்களை மாற்றிவிடும். உன்னுடைய சித்த விகாரங்களும் மாறும். நீ பரார்த்த இரசவாதத்தைக் கற்றுக் கொண்டவனாக ஆவாய்.

(இன்னும் வரும்)

வி. வெங்கடஸாமிஐயர்.

அஹல்யாசாப விமோசனம்.

(334-ம் பக்கத்தொடர்ச்சி.)

(334-ம் பக்கத்தொடர்ச்சி.)

பகவானவதரித்த காரியம் சித்திக்குமுன் எந்த சரீரமானதவருடைய இச்சையைப்பூர்த்திசெய்வதற்குக்கருவியாக ஏற்படப்போகிறதோ அந்த சரீரத்தைத்தகுந்தபடி சுத்தம் செய்து உள்ளிருக்கும் சைதந்யம் சரியாக சரீரங்களில் வேலைசெய்யும் வண்ணம் ஒழுங்குபடுத்த விச்வாமித்திர மஹரிஷியிடமிருந்து சில உபதேசங்கள் பெற வேண்டியதின் நிமித்தமே ராமலக்ஷ்மணர்கள் விச்வாமித்திராதாச்ரமத்திற்குப்போகின்றார்கள்போலும். பெரியமஹரிஷிகளோ அல்லது பகவானே ஒருசரீரத்திலவதாரம் செய்யும் முன்னர் சரீரம் ஸத்குருவினுபதேசத்தினால் (Initiation) சுத்தஞ்செய்யப்பட்டிருக்கவேண்டும். அவதாரம் நடைபெறும்போது அவதரிப்போர் யார்? எவருடைய சரீரத்திலவதார மேற்படுகிற தென்கிற விஷயத்தைக்குறித்தாராய்ந்து பார்த்தாற்றா னவ்வவதாரத்தினிரஹஸியம் நன்கு விளங்கும். ராமன்தனக்கேற்பட்ட அநேகசந்தேகங்களைத்தனது குலகுருவாகிய வஸிஷ்டமுனிவரிடம் தீர்த்துக்கொண்டாரென்றும் இன்னும் தேகவியோகமான பிறகு யமலோகத்திலும் சுவர்க்கலோகத்திலும் ராமன் காணப்பட்டாரென்றும் நமதிதிகாசபுராணாதிகளில் சொல்லியிருப்பதைக்குறித்து யோசிக்குங்கால் பகவானுடைய அவதாரநிமித்தம் தனது சரீரத்தையர்ப்பணம் செய்த ஜீவன்வேறு; அவன்தான் ராமன். ராவணஸம்ஹாராதிகாரியங்கள் நடந்த சமயங்களில் அச்சரீரத்தில் வேலைசெய்தவர் பகவான், பகவத்காரியம்நிறைவேறினபிறகு அந்தச்சரீரத்திலிருந்தவன் தசரத புத்திரனான ராமனென்று தான் தோன்றுகின்றது. பரசுராமரைக்காணும் வரையில் ராமனுடைய சரீரத்திலிருந்தவனந்தராமனே. பிறகு சமயோசிதமாக பகவத்காரியத்தின் நிமித்தமந்த சரீரமுபயோகப்படுத்தப்பட்டது. கிருஷ்ணாவதாரத்தையும் குறித்து இவ்விதவபிப்பிராயங்களை மேற்கொள்ள அநேக காரணங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி விஸ்தாரமாக எழுத இது இடமல்ல.

விச்வாமித்திரரிடமிருந்து வனம் போகும் வழியிலநேக உபதேசங்களைப்பெற்றார்கள் ராமலக்ஷ்மணர்கள். அநேக அஸ்திரசஸ்திரங்களின்ரஹஸியத்தையுமறிந்து கொண்டார்கள். பசிதாகத்தைநீக்கும் பலை, அதிபலை யென்ற இரண்டு மந்த்ரங்களையும் கற்றார்கள்.

தாடகா வனம் வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்ததும் விச்வாமித்திரர் பின் தயங்கலாயினர். இந்த ஜகத்தி லிரண்டு விதமான யோக சித்திமார்க்கங்களுண்டு. ராஜயோகமார்க்கத்தையடுத்துஜகத்துக்குழைப்பதையே தனது தொழிலாகக்கொண்ட விச்வாமித்திரர் வசிஷ்டர் முதலியவர்களனுஸரிக்கும் மார்க்க மொன்று. இது தான் மேன்மை பொருந்தியது. ஈச்வரனதிச்சைக் கநுகுணமானது. மற்ற மார்க்கத்திலுழைப்பவர்கள் கணக்கில்லாத சித்திகளையெல்லாம்பெற்றிருந்தபோதிலுமவைகளைத்தன்னுடைய சௌகரியத்தின் பொருட்டுபயோகப்படுத்திப்பிறருக்குத் தீங்குவிளைவிப்பார்கள். வெகு சாமர்த்திய சாலிகளாயிருப்பார்கள். அதிஸூக்ஷ்மமான லோகங்களில் சஞ்சரிப்பார்கள், அதனாற்பயனென்ன. எப்போது பிறருக்குத்தீங்கு செய்யத்தலைப்பட்டனரோ அப்போதே ஈச்வரனுடைய இச்சையாகிற பூதவிகாஸ முறைக்கு (Evolution) க்குறுக்காக நிற்கிறார்கள். இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் தாடகை, சுபாஹு, மாரீசன் முதலியவர்கள். இவர்கள் பொதுவிலுலகிலுள்ளோர்க்குத்துன்பம் விளைவிப்பது மட்டுமில்லாமல் மற்ற மார்க்கத்திலுழைத்து ஜகத்துக்குபகாரம் செய்யும் ரிஷிகளை வெகுவாய் ஹிம்ஸிப்பது வழக்கம்; அவர்கள் செய்யும் யாக கிருத்தியங்களுக்குக் கணக்கில்லா இடையூறுகளை விளைவிப்பார்கள்; அந்தரிஷிகளையும் சமயத்திற்குத் தக்கபடி யெதிர்த்து, அடித்துத்துரத்தித் துன்பத்திற்காளாக்குவார்கள். ஆகையால்தான் தாடகா வனம் வந்தவுடன் விச்வாமித்திரர் கொஞ்சம் பின் தயங்கலானார்.

வனத்திற்குள் கொஞ்ச தூரம்சென்றதுமிவர்களெதிரிற் றாடகை தோன்றினாள். அதிவிரூபி, இருண்டமேகத்தையொத்த மேனியுடையவள், ஸதாஸர்வதா மனிதமாம்சத்தைப் புசிப்பதில் திருப்தியுடையவள், அவளுடைய ஆடையாபரணங்களவளது ஸ்வபாவத்தையொத்தேயிருக்கும். இரண்டு யானைக்குட்டிகளவளுடைய இருசெவிகளுக்கும் குழைகளாக விளங்கின. பக்ஷித்த பிராணிகளின் நரம்புகளால் செய்யப்பட்ட வஸ்திரமே அவளுடைய சேலை. மனிதர்களுடைய மண்டையோடுகளால் செய்யப்பட்ட பதக்கம் முதலிய நகைகளாலலங்கரிக்கப்பட்டங்குதோன்றினாள். அவளைக் கண்டதும் கௌசிக முனிவர் ராமசந்திரனை யவள்மீது பாண

மெய்யச்சொன்னர். ஸ்ரீராம்பிரானும் தனது வில்லில் நாணேற்றி யோரஸ்திரத்தை யெடுத்துதிற் றெடுக்கும் சமயத்தில், "இவள் ஸ்திரியாயிற்றே, இவளைக் கொன்ருல் ஸ்திரீஹத்தி பாபம் நம்மைப் பாதிக்குமோ" என்று மனதிற் சந்தேகங்கொண்டு முனிவரைக் கண்ணுற்ருன். கௌசிகரு மவனது சந்தேகத்தை யறிந்துகொண்டு, "ராமா, தயங்காதே, சந்தேகப்படாதே, இவள் ஸ்திரீயென்று நினையாதே, உன்னை இப்போது சந்தேகத்துக்குள்ளாக்கியிருக்கும் தர்மம் கீழ்ப்பட்ட தர்மம், அது உன்னைப்பாதிக்காது. நீ யதைக்கடந்தவன், ஸ்திரீஹத்தி பாபமுன்னை யண்டாது, எது எப்படியிருந்தாலென்ன, எப்போது நான்சொல்லுகிறேனே அப்போதே அது தர்மமாகுமுனக்கு. என்னைக்குருவாகவரித்திருக்குமுனக்கு எனதுவார்த்தைப்படி நடப்பதே தர்மம். சந்தேகப்படாதே," என்றுரைத்தார். ஸ்ரீராமனும் தனது மனக்கலக்கம் நீங்கப்பெற்று அக்கொடிய அரக்கியின்மீது பாணத்தைப் பிரயோகித்தார். தாடகையின் மீதப்பாணம் பட்டவுடனடியற்ற மரம்போல் தரணியில் வீழ்ந்தாள். விச்வாமித்திரமுனிவருக்குண்டான ஆனந்தத்திற் களவே கிடையாது; வானோர் வீதியி லமரர்கள் களித்து வாத்யகோஷங்களுடன் ராமசந்திரமூர்த்தியின்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள்.

தனதாச்ரமஞ்சென்று கௌசிகர் யாகஞ்செய்யத்தொடங்கினர். அதைக் காக்க ராம லக்ஷ்மணர்கள் ஸீந்நத்தர்களாக நின்றார்கள். யாகமாரம்பமானவுடன் ஏற்கெனவே தங்களது தாயான தாடகையின் வதத்தினலடங்காக் கோபங் கொண்டிருக்கும் ஸுபாஹு மாரீசர்களென்ற இரண்டரக்கர்களு மநேக ராக்ஷஸக் கூட்டங்களோடு அவ் வாச்ரமத்தை யடைந்து அங்கே நடக்கும் யாகம் நிறை பெருவண்ணம் ஹோமகுண்டத்தில் ரக்தம், மாம்ஸம் முதலிய பதார்த்தங்களை விட்டெறியத் தொடங்கினர்கள்.

(இன்னும் வரும்)

R. ஸ்ரீநிவாஸ ஐயர்.

பிரஹ்மக்ஞான சங்கமும் அதன் கொள்கைகளும்.

இத்தலைப்பெயர் பூண்ட சங்கமானது நம் பரதக்கண்டம் தோன்றிய நாள் முதல் இருந்து வருகிறது. இதற்குத் தற்காலத்தில் ஆங்கில பாஷையில் தியாஸாபிகல் ஸொஸைடி என்று பெயர். தியாஸாபிகல் ஸொஸைடி என்றாலும் பிரஹ்மக்ஞான சங்கமென்றே தான் பொருள். தியாஸ் என்றால் பிரஹ்மம், ஸ்வாமி அல்லது கடவுள் என்றும், ஸோபியா என்றால் ஞானம் என்றும், ஸொஸைடி என்றால் சங்கம் என்றும் அர்த்தம். ஆகையால் பிரஹ்மக்ஞான சங்கமென்று ஏற்படுகிறது.

இதற்கு முக்கிய அதிஷ்டானம் ஹிமாசலத்தின் வடபாகமாகிய நைமிஷாரண்யத்திலுள்ளது. அதற்கு ஆங்கிலத்தில் "White Lodge" அதாவது "சுவேதாச்சிரமம்" என்று பெயர். சுவேதம் என்றால் வெண்மை; ஆச்சிரமம் என்றால் இடம். அசுத்தமற்ற சுத்தமான வஸ்துக்களுக்கெல்லாம் வெண்மையையே ஒப்பிடுகிறதாகையால் இந்த இடத்திற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனை "வெள்ளியம்பல" மென்றுங் கூறுவர். தேவர்கள் கூடி ஏற்படும் சங்கத்திற்கு பொன்னம்பலம் என்றும், ஞானிகள் கூடியிருக்கும் சங்கத்திற்கு வெள்ளியம்பலம் என்றும் பெயர். ஜீவன் முக்தர்களான மஹா ரிஷிகள் எல்லோரும் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் ஜீவன் முத்தி நிலையை யடைந்து விட்டாலும் உலகத்தில் ஜீவராசிகள் படும் கஷ்ட நிலைமையைக் கண்டு பரிதபித்து உலக ரக்ஷணார்த்தம் சகல ஜனங்களும் இகபரலோக சாதனங்களை எளிதில் அடையும் பொருட்டு சதா காலமும் இடைவிடாது முயற்சிசெய்து வருகிறார்கள்; ஈசுவரனுடைய நியதிக்கிரமத்தை முற்றிலும் அறிந்த மகான்கள்; ஜனங்கள் ராஜரீகமுறைமையிலும் ஆத்மஞானத்தை யடையும் விஷயத்திலும் அதிக சிரத்தையுள்ளவர்கள். இப்போது ஏற்பட்டிருக்கிறமாதிரி உலகத்தைக் கண்டங்களாகவும், தேசங்களாகவும், இராஜதானிகளாகவும், ஜில்லாக்களாகவும் வகுத்துக்கொண்டு அவரவர்களுக்கேற்பட்ட பாகங்களிற்சென்று ராஜரீகத்திலும், நாகரிகத்திலும், ஆத்மஞானத்திலும் ஜனங்கள் தேர்ச்சியடையவேண்டியதற்காகப் பிரயாசைப்பட்டுவருகிறார்கள்.

அன்றியும் வருஷம் ஒருமுறை மேற்சொன்ன சுவேதஸ்தலத்திலோ அல்லது குறிப்பிட்டவேறிடத்திலோ இவர்கள் ஒருங்குகூடி நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி யோசனை செய்து கொள்ளுகிறார்கள். அன்றைபதினத்தைத்தான் நாம் "வைசாக சுத்த பௌர்ணமி" என்று கொண்டாடுகிறோம். அக்கூட்டத்தின் க்ஷேமத்தின் பொருட்டு மகரிஷி வியாஸபகவான் தோன்றி அநுக்கிரகிக்கிறார்.

இம்மகான்கள் தங்கள்ஸ்தூலசரீரத்தோடிருக்கிறார்கள். பெரும்பாலும் தங்கள் சூக்ஷ்மசரீரங்களிற்சென்று ஜனங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள். சில சமயங்களில் பரகாயப் பிரவேசஞ் செய்து அச்சரீரத்திலிருந்துகொண்டு நன்மைகளைச்செய்வார்கள். அவசியம் நேரிட்டால் தமக்கு ஸ்தூல சரீரங்களையும் கணப்போழ்தில் சிருஷ்டித்துக் கொள்வார்கள். இன்னும் அதிக அவசியம் நேரிடுங்காலங்களில் நம்மைப்போலவே ஜனனமெடுத்து பால்ய, கௌமார, யௌவன, வயோதிக சரீர ஸ்திதிகளையடைந்து நம்மோடிருந்து நம்முடைய க்ஷேமலாபத்துக்காகப் பாடுபடுகிறார்கள். புத்தர், சங்கரர், இராமாநுஜர். கிறிஸ்து, மகமதுநபி முதலிய மதாசாரியர்களான பெரியோர்களும் மேற்சொன்ன இச்சங்கத்தாரைச் சேர்ந்தவர்களே.

இந்த மகான்கள் அந்தந்தக் காலங்களில் ஜனங்களுக்கேற்பட்டிருக்கும் புத்திதத்துவத்திற்கு எட்டக்கூடியதாக மதங்களை புண்டுபண்ணி ஞானத்தைப்புகட்டி வருகிறார்கள். தத்காலத்தில் இச்சங்கத்தை இவ்வுலகில் நடைபெறச்செய்ய அம்மகான்களின் தீர்மானப்படி அக்கூட்டத்தாரில் இருவர் ஏற்பட்டிருக்கின்றனர். ஒருவர் சூரிய வம்சத்தைச்சேர்ந்தவர்; அவர் பெயர் மரு. மற்றொருவர் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர், அவர் பெயர் தேவாபி. இவ்விருவர்களுடையவிருத்தாந்தங்களையும் பாகவதம், 12 வது ஸ்கந்தத்திலும் கல்கி புராணம் முதலியவைகளிலும் காணலாம்.

இவ்விந்தியாவுக்கு மேல்நாட்டார்கள் வந்தசொற்பகாலங்களுக்குள் இந்தியர்களுடைய நடை, உடை, ஆசாரம், ஆத்மஞானம் இவைகள் வரவரக் குறைவுபட ஆரம்பித்துவிட்டன. அநேகர்

மேனாட்டாருடைய நாஸ்திகவாதப் புத்தகங்களை வாசித்துவிட்டு தங்களுடைய பிறப்பையும் ஆசாரங்களையும் அடியோடு மறந்து சுவாமியே இல்லையென்றும் சுபாவத்தினாலேயே ஜனன மரணங்கள் சம்பவிக்கின்றனவென்றும் வாதம் செய்ய ஆரம்பித்தார்கள். இதைச் சீர்திருத்தவேண்டியும் இவ்விந்தியாவில் மறைந்து கிடக்கும் ஆத்ம ஞானமானது உலக முழுவதிலும் வியாபித்து எல்லா ஜனங்களையும் நற்கதிக்குப் பாத்திரர்களாகச் செய்யவேண்டியதை உத்தேசித்தும் எந்த ஜாதியால் இக்கெடுதி சம்பவித்ததோ அச்சாதியிற் பிறந்தோராலேயே இதைச் சீர்திருத்த நினைத்து தங்கள் சிஷ்யர்களிற் சிலரை மேனாடுகளிற் போயவதரிக்கும்படி செய்து அவர்கள் மூலமாக இந்த ஆத்மஞானத்தைப் பரவச்செய்ய அபிப்பிராயங்கொண்டனர்.

அப்படி ஜனனம் எடுத்த சிலரில் மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மாள் என்ற ஸ்திரீ வேடம் பூண்டவர் ஒருவரும் கர்னல் ஆல்காட் என்றவர் ஒருவரும் இந்த பிரஹ்மஞான சங்கத்தின் முதற் கிளையை முதல்முதலாக அமெரிக்காக்கண்டத்தில் நியூயார்க் என்னுமிடத்தில் சுமார் 38 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபித்தனர். நற்காரியங்களைச் செய்பவர்களுக்கு இடையூறுகள் பல நேரிடுவது சுபாவமாதலால் இவர்களுக்கு அநேக துன்பங்கள் சம்பவித்தன. அவைகள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு அங்கிருந்து இந்தியாவுக்கு வந்து அக்கிளைச் சாலையின் பிரதான ஸ்தானத்தை முதலில் பம்பாய் நகரத்திலும் அதற்குப்பிறகு சென்னைக்கருகிலுள்ள அடையாறு (Adyar, என்னுமிடத்திலும் ஸ்தாபித்தார்கள். அதுமுதல் இச்சபையானது பூமியிலிட்ட நல்லவித்தைப்போல முளைத்துத் தளிர்த்துச் செழித்துக் கிளைத்துப்பரவி விழுதூன்றி இப்போது இவ்வுலக முழுவதிலும் வியாபித்திருக்கின்றது.

இச்சபையார்களின் முக்கிய கொள்கைகள் :—

1. உலகத்திலுள்ள சகல மனிதர்களுக்குள்ளும் எந்தச் சாதியாரானாலும், மதஸ்தர்களானாலும், குலத்தர்களானாலும் சரி, ஒருவர்க்கொருவர் சகோதர பாவமும் அன்பும் பாராட்டவேண்டுமென்பதும்.

2. ஜனங்களுக்குள் மதவேற்றுமையினால் ஐக்கியம் குறைவுபட்டிருப்பதை நிவர்த்திசெய்து அவர்களுக்குள் அன்னியோன்ய பாவத்தையும் அன்பையும் விருத்திசெய்விக்க வேண்டுமென்பதும்.

3. ஒவ்வொருவரும் தாம் பிறந்த மதத்தினுண்மைகளைத்தெரிந்துகொள்வது மாத்திரமல்லாமல் மற்ற மதங்களினுடைய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து சமமாகப் பாவிக்க வேண்டுமென்பதும், ஒவ்வொருவரும் தம்மிடம் குப்தமாகவிருக்கும் ஆத்மசக்திகளை ஞானயோக சாஸ்திர முறைகளின்படி ஆராய்ச்சிசெய்து அநுஷ்டித்து அபிவிருத்திசெய்து கொள்ளவேண்டுமென்பதுமாம்.

இதற்காக இவ்வுலக முழுவதிலும் ஆங்காங்கு கிளைச்சபைகள் ஏற்பட்டு ஜனங்களுக்கு ஞானத்தைப்போதித்து வருகின்றன. இப்பூலோகத்தில் இப்போது இப்பிரஹ்மக்ஞான சபையில்லாத நாடே இல்லை. ஆங்கில இராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதே யில்லையென்று சொல்லுமாறு ஆத்மஞான மென்னும் சூரிய தேஜஸும் இச்சபையால் இப்புவியெங்கும் பிரகாசித்து வருகிறது.

இச்சங்கத்தாருக்கு எல்லா முக்கிய மதங்களும் சம்மதமே. ஏனெனில் அச்சமயங்களெல்லாம் இச்சபையின் முதன்மையோர்களாயுள்ள ஞானவான்களாகிய பெரியோர்களால் காலதேச வர்த்தமானங்களை யுத்தேசித்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. எந்த மதத்திற் பிறந்தவர்களானாலும், தாம்பிறந்த அவ்வம்மதங்களிற் குப்தமாயிருக்கும் உண்மைகளை முற்றும் ஆராய்ச்சிசெய்து அநுஷ்டித்து வருவதால் முக்தியை அடையலாமென்பதும், தாங்கள் பிறந்த மதங்களின் உண்மை ஆசாரம் இவைகளைக் கைநழுவ விட்டு ஏனைய மதங்களின் ஆசாரங்களை யநுஷ்டிப்பது சரியல்ல வென்பதும், பகவத்கீதை 3-வது அத்தியாயம் 35-வது சுலோகத்திலும், 18-வது அத்தியாயம் 45 முதல் 50 வரையுள்ள சுலோகங்களிலும் சொல்லியிருக்கிறபடி தாழ்வுள்ளதாக விருந்தாலும் ஒருவன் கடவுளால் தனக்கு அமைக்கப்பட்டிருக்குங் கர்மங்களையே பலாபேக்ஷையின்றி சரிவரச் செய்வதினாலேயே முக்தியை யடையலா மென்பதும் இவர்களின் கொள்கை.

இக் கருத்தைக் கொண்டே இச் சங்கத்தின் வெளித் தலைவராலும், இன்னும் மற்றவர்களாலும், ஏனைய மத குருக்கள் மார்களைப் போல் இந்து மதமாவது, கிறிஸ்தவ மதமாவது, மகம்மதிய மதமாவது, ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்தது, தாழ்ந்தது என்று

போதிக்கப்படுகிறதில்லை; ஆனால் எல்லா மதங்களும் தத்தம் நிலைமைகளில் அவைகளே பெரியவைகள் என்றும், உலகத்தைப் படைத்துக் காக்குங் கடவுளானவர் நாம் அவ்வம் மதங்களையே அநுஷ்டிக்க வேண்டி நம்மை வெவ்வேறு மதங்களிற் பிறப்பித்திருக்கிறார் என்றும், நாம் பிறந்த மதங்களை விட்டு வேறு மதக்கொள்கைகளை யாசரிப்போமானால் அது அவர் கொண்ட கருத்துக்கு மாறாகுமென்றும் அப்படி நாம் வேறு மதங்ளின் கொள்கைகளை யாசரிக்கவேண்டியது அவர் எண்ணமாயின் அம் மதங்களிலேயே நம்மைப் பிறப்பித்திருப்பாரென்றும், ஆகையால் நாம் பிறந்த மதங்களின் ஆசாரங்களையே வழுவாது அநுஷ்டித்து வரவேண்டுமென்றும் போதிக்கப்படுகின்றன.

அன்றியும் இச் சங்கத்தார் வருடத்திற் பன்முறை கிளைச்சபைகள் ஏற்பட்டிருக்குமிடங்களிலும், மற்றுமுள்ளவிடங்களிலும், இச் சபையைச் சார்ந்துள்ளவர்களையும், இச் சபையினிடத்துப் பிரீதியுள்ளவர்களையும், மற்றவர்களையும் அழைப்பித்து அவர்களுக்குச் சகோதர பாவம், பக்தி, அன்பு, ஒற்றுமை முதலிய விஷயங்களைப் போதிப்பதற்காக அநேக பிரசங்கங்களையும் நடத்தி வருகிறார்கள்.

இவ்விதஞ் செய்யப் பட்டு வரும் பிரசங்கங்களெல்லாம் ஆங்கிலத்திலும் தமிழிலும் எளிதில் எல்லோரும் வாசித்தறிந்து கொள்ளும்படி ஆயிரக் கணக்காக புஸ்தகங்களாகவும் பத்திரிகைகளாகவும் அச்சிடப்பட்டு சில சமயங்களில் இனாமாகவுங் கூட ஜனங்களுக்குக் கொடுக்கப் பட்டு வருகின்றன.

மேலும் இப்போதேற்பட்டிருக்கும் தர்மக்குறையைச் சீர்திருத்தி அதர்ம விருத்தியைக் கண்டித்து ஜனங்களுக்கு ஆத்ம ஞானத்தையும் க்ஷேமத்தையும் உண்டு பண்ணுவதற்காக மேற்சொன்ன மகான்களின் கூட்டத்திலிருந்து ஜகத்குருவானபகவான் மைத்திரேயர் கூடிய சிக்கிரம் அவதாரஞ் செய்யப் போகிறாரென்றும், ஜனங்கள் அவரை அங்கீகரித்துப் பக்தி பாராட்டி நற்கதி யடைய வேண்டிய தவசிய மென்றும், ஸ்ரீமத் சங்கராசாரியருக்கும் ஸோமயாஜிகளுக்கும் ஈசுவரன் புலையரூபமாகக்காட்சி கொடுத்ததுபோல அவர்

எந்த ரூபமாகத் தான் வரப் போகிறாரென்பது நமக்குத் தெரியா தாதலால் நாம் இப்போது முதற்கொண்டே நம்முடைய நடத்தை களை யொழுங்கு படுத்தி சகல மத சம புத்தியையும் சகல மதஸ்தர் களிடமும் சகோதர பாவத்தையும், அன்பையும் பாராட்டி அபிவிரு த்தி செய்து கொண்டு ஆத்ம ஞானம் சம்பாதிக்கும் விஷயத்தில் புத்தியை நிலை நாட்டி ஞானத்தை யடையப் பிரயத்தினஞ் செய்யா விட்டால் பின்னிட்டு அவர் அவதரித்து உலகத்தில் நம்மைப் போல வே காரியங்களை நடத்தி வரும்போது அவருடைய மகிமைகளைநாம் தெரிந்து கொள்ள முடியாமல் மதி மயங்கி அவரையும் நம்மைப் போலவே ஒரு சாதாரண மனிதனாக நினைத்து விடுவோமென்றும், அன்றியும் பூர்வத்தில் கிறிஸ்துவானவர் அவதாரஞ்செய்து ஜனங்க ளுக்கு ஞானத்தைப் போதித்த காலத்தில் யூதர்கள் அவர் சொல் லில் நம்பிக்கை வைக்காமல் மோசக்காரனென்று தூஷித்து அவரை யுயிர்வதை செய்ததைப் போல் நாமும் அவருக்குத் தீங்கு செய்யா மலிருக்க வேண்டுமென்றும் முரசறைவித்து வருகிறார்கள்.

அன்றியும் இச் சங்கத்திற் சேர்ந்திருப்பவர்கள் எம் மதஸ்தர் களானாலும் சரி, மத விரோதம் பாராட்டாமல் ஏனைய மதஸ்தர்களை யும் உண்மையை நாடித் தேடும் தங்களைப் போன்ற சகோதரர்களே னப் பாவித்து அவர்களுடன் சேர்ந்து உண்மையை யாராய்ச்சிசெய் கிறார்கள். இவர்கள் பாராட்டும் சகோதர பாவம் வெளிப் படையான ஒரு கட்டுப் பாட்டைக் கொண்டு ஏற்பட்டதல்ல. எல்லா மதங்க ளும் கடவுளை யடையும் பொருட்டுக் கற்பிக்கப்பட்ட மார்க்கங்களெ ன்றும் அம் மதஸ்தர்களெல்லாம் கடவுளை யடையும் மார்க்கங்களிற் செல்லும் பிரயாணிகளென்றும், ஒரே இடத்திற்குச் செல்லும் பல மார்க்கங்களின் வழியாகப் பிரயாணப்பட்டு வந்து கடைசியில் எப் படி ஒரு இடத்திற் சந்திக்கலாமோ அப்படிப் பிரயாணப்பட்டு வரு கிறவர்களெல்லொருவரும் எப்படி ஒரே இடத்தைக் குறித்துவரும் பிரயாணிகளோ அதுபோல ஒவ்வொரு மதஸ்தர்களும் உண்மையா கிய நிலையைத் தேடி பலதிசைகளி லிருந்து வரும் பிரயாணிகள் என்றும், ஆகையால் எல்லாரும் ஒரே கருத்தைக் கொண்ட சகோ தரர்கள் என்றும் கருதுகின்றனர்

மேலும் தாங்களே சாஸ்திர ஆராய்ச்சி செய்வதினாலாவது அல்லது புத்தி பூர்வமாக உண்டாகும் உள்ளத் தோற்றத்தினாலாவது ஒவ்வொருவருக்கும் ஒன்றில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமேயொழிய மற்றவர்களுடைய கட்டாயத்துக்காக மூடபக்தியுடன் ஒன்றிலும் நம்பிக்கை கூடாதென்றும், பிறர் தூண்டுதலால் ஏற்படும் "நம்பிக்கை நீடித்து நிலை பெறாதாதலால் அது தங்களுடைய ஸ்வநூபூதிக்கு ஒத்ததாக இருக்க வேண்டு மென்றும் இவர்கள் கூறுகின்றனர். சமாதான மென்பது இவர்கள் கொடி. உண்மை யென்பது இவர்கள் குறி.

எல்லா மதங்களையும் இவர்கள் ஆராய்ச்சி செய்து எல்லா மதங்களி லுண்மைகளையுமே ஆதாரமாகக் கொண்டு சில சாஸ்திரங்களை யெழுதி யிருக்கிறார்கள். இச் சாஸ்திரங்கள் உலகத்தினுடைய தன்மைகளையும், ஜீவர்களுடைய தன்மைகளையும், அவர்கள் இதுவரை அடைந்திருக்கும் அபிவிருத்திக் கிரமங்களையும், இனி அவர்கள் அடைய வேண்டிய நிலைமைகளையும் நம்பிக்கைக்கு ஒத்ததாக விளக்கி, இதற்கெல்லாம் சர்வ ஜீவ தயாபரரான கடவுளே காரணமென்றும், மரணமென்றும், ஜனனமென்றும் சொல்லப்படுவது நாம் பழைய வஸ்திரங்களை யெறிந்து விட்டு புது வஸ்திரங்களைக் கைக் கொள்வது போல ஒவ்வொரு சரீரத்தினுள்ளும் உறையுங் கடவுளின் அம்சமாகிய ஜீவான்மாவின் விகாசத்தை யுத்தேசித்து அடிக்கடி ஏற்பட வேண்டிய சாதாரணமான விஷய மென்றும்; "அக மக மென்றனைத் துயிரினிடத் துமிருந்தன வாதம் உரைப்பதாகி" என்றபடி அந்த ஜீவன்தான் எவ்வுயிர்களிடத்தும் எக்காலத்தும் சாட்சிப்பொருளாக நின்று யான், எனது என்று வழங்குகின்றான் என்றும் அவனைத் தேடிக் கண்டு பிடித்தலே ஈசுவரனைக் கண்டு பிடித்தற்கு வழியாகு மென்றும், ஆகையால் ஒவ்வொருவரும் தத்தமிடம் குப்தமாக விருக்கும் ஜீவ ஸ்வரூபியாகிய ஈசுவரனையே தேட வேண்டு மென்றும்; அந்த ஜீவனுக்குப் புறமாயுள்ள தநு கரணாதிகள் எல்லாம் ஜீவனுடைய உபயோகத்திற்காக ஏற்பட்டஜடவஸ்துக்கள்என்றும் போதிப்பதுமல்லாமல் ஒவ்வொரு மதங்களிலும் குப்தமாகப் போதித்திருக்கும் உண்மைகளை யறிந்து கொள்ளத் திறவுகோல்களாகவும் ஏற்பட்டிருக்கின்றன.

மேற்சொன்ன கருத்துகளைக் கொண்டு இச்சபையிலுள்ளாரனைவரும் சாஸ்திர ஆராய்ச்சிகளையும் அவரவர்கள் ஆராய்ச்சிக்குத் தக்கபடி கூடுமானவரை ஆசரணைகளையும் செய்து வருகிறார்கள். இதேகருத்தும், சாஸ்திரஆராய்ச்சியில் ஊக்கமும், சகலமதசமபுத்தியும், உண்மையைத்தேட விருப்பமும் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் இச்சபையில் அங்கத்தினராகச் சேரலாம். இவ்வாறு சேர்ந்தவர்கள் "தியாஸொபிஸ்ட்" (Theosophist) என்றழைக்கப் படுவார்கள்; அதாவது பிரஹ்மக்ஞான மார்க்கத்தை யநுசரிப்போர் என்று அர்த்தம். ஆனால் இப்பெயரை வகிக்க உண்மையில் பாத்திரர்களாகச் செய்து கொள்ளவேண்டியதவரவர்கள் கடமை.

ஆத்தங்குடி ஸ்வாமிநாத ஐயர்.

நன்மொழி.

---

20. நாம் ஆத்ம பரிபாகம் பெறவேண்டுமானால், நம்மிடமுள்ள அழுக்காறுகளை, அதாவது குற்றங்களையும் தவறுதல்களையும் நாமே ஆராய்ந்து மனங் கசிந்து அழுது, உறுதியான தீர்மானத்துடன் மறுபடி அக்குற்றங்களைச் செய்யாதொழிதல் வேண்டும்.

21. புனுகு, எப்படி பிறர்பார்வைக்கு மறைத்து வைத்திருந்தாலும் ஸ்வாபாவிகமாகவே நற்கந்தம் வீசுகின்றதோ, அம்மாதிரியே ஸாதுக்கள், ஜநமான்யர்கள் அவர்களைக் கவனிக்காமலிருந்தாலும், அல்லது நிந்தித்து ஹிம்ஸித்தாலுங்கூட ஸதாஸர்வகாலமும் உலகத்திற்கு நன்மையையே செய்து வருவர். உலகத்திற்கு உண்டாகும்க்ஷேமங்களைக் கவனித்தே, அவற்றிற்குக் காரணபூதமான ஸாதுக்கள் இருக்கிறார்கள் என்றறிந்து கொள்ளலாம்.

22. ஸாதாரணமாக மனிதர் பிறர் சொல்வதைப் பொறுக்க மாட்டாமல் ரோசங்கொண்டு அவர்களுடன் சண்டைபோட மட்டும் உடனே ஸந்நத்தர்களாகிறார்கள். அதுமாதிரி, உடனே செய்ய வேண்டிய பொறுப்பான காரியங்களில் அவ்வளவு பரபரப்பைக் காண்பிக்கிறதில்லை.

தோற்ருத் துணைவர்கள்.*

இவ்வுலகில் மாந்தரின் கண்களிற் புலப்படாமலே உபகரிக்குந் தோற்ருத்துணைவர்களின் கூட்டமொன்றுள்ளது. அச்சிறந்த கூட்டத்தில் தம்மையுஞ் சேர்த்துக் கொள்ளவும் அதற்கு வேண்டிய தகுதிகளைத் தெரிவிக்கவும் வேண்டுமென்று ஜனங்கள் பலமுறையும் விண்ணப்பஞ் செய்கிருர்கள். அவ்வாறு விரும்புவோர் எம்மாலே முதப் பெற்ற (Invisible Helpers) தோற்ருத்துணைவர்கள் என்னுந்தலைப்பையுடைய கிரந்தத்தை நன்ருய் வாசித்து அதிற்சொல்லப் பெற்ற தகுதிகளைத் தம்மிடம் சாவதானமாய் விருத்தி செய்து கொள்ளவேண்டும். புவர்லோகத்தில் உதவிசெய்ய விரும்புவோர், அந்த லோகவாழ்க்கையின் நிலைமைகளை முதலில் நன்ருய்த்தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இங்குள்ளவாறே நாம் புவர்லோகத்திலு மிருக்கிருேம். ஆனல் அங்கே சில தடைகள் நம்மைவிட்டு நீங்கிவிடுகின்றன. நமது விருப்பங்களும் காரியங்களும் பூலோகத்தி லுள்ளவாறே புவர்லோகத்திலுமிருக்கின்றன. கற்றலில் அவாவுள்ள மாணுக்கன் புவர்லோகத்திலும் கல்விப்பிரியனுக விருக்கிருன். சோம்பனுயுள்ளவன் அங்கும் வீண்பொழுது போக்குகிருன். பூலோகத்தில் சிரத்தையோடு பரோபகாரஞ் செய்வோன் புவர்லோகத்திலும் உபகாரியாயிருக்கிருன். விஷத்தன்மையுள்ள அலப்புவாயர்கள் புவர்லோகத்திலும் தங்களின் வழக்கமான பாபகர்மத்தை யீட்டுகிருர்கள். இறந்துபோன அநேகர் ஜீவியகாலத்தில் தாங்கள் அதிகமாய்ப் பழகியிருந்த விடங்களில் நீண்டநாள் சஞ்சரிக்கின்றனர். தங்கள் முன்னேர்களின் இல்லங்களை வட்டமிடுவோர் பலர். தாம் ஆதரித்து வந்த ஆலயங்களின் புவர்லோகப் பிரதிரூபத்தை நாள்தோறுந் தரிசிப்போர் பலர். ஜீவித்திருந்தபோது வீணில் முயன்ற மாந்தர் இறந்தபின் யாதொரு பொருட்செலவும் மெய்வருத்தமுமின்றி புண்ணியஸ்தல யாத்திரைகளும் பூப்பிரதக்ஷிணமுஞ் செய்கின்றனர்.

---

* இது ஸ்ரீமான் C. W. லெட்பீட்டர் அவர்களின் அடையாற்று சம்பாஷணைகளிலுள்ளது.

புவர்லோக ஜீவியம் தொடர்பானது, அது பூலோக ஜீவியத்தினும் உண்மையுள்ளது. நம்மில் பலர்க்கு இராக்காலம் சூனியம் போல் காணப்படுகின்றது. நாம் செய்தவற்றுள் ஒன்றேனும் காலையில் நமது நினைவிற்கு வருவதில்லை. இதனால் நாம் புவர்லோகத்தில் மந்தித்திருப்பதாய்க் கருதிவிடுதல் தவறானது. அங்கே நமது பிரக்ஞை விசாலித்துள்ளது. ஒவ்வொரு இரவிலும் சென்ற இரவுகளின் விவரங்களும் பகல்களின் விவரங்களும் நமது ஞாபகத்திற்குத் தெளிவாயுண்டாகின்றன. ஸ்தூல மூளை மந்தமாயும் தடிப்பேறியும் இருத்தலால் புவர்லோக விவகாரங்களை அது நமக்குக் காட்டக்கூடாததாகின்றது. ஆனால் அதற்கு நேரான சம்பந்தமுள்ள விஷயங்களை மாத்திரம் கிரகித்து விடுகின்றது. புவர்லோகத்தில், பூலோக புவர்லோகப் பிரக்ஞைகள் இரண்டும் இருக்கின்றன. ஆதலின் அத்தொடர்பான ஜீவியத்தில் இடைவெளிபோல பூலோகவிவகாரம் அமைந்த பகற்காலம் குறுக்கிடுகின்றது. மேலும், மநச் சலனங்கள் புவர்லோகத்தில் பலமுள்ளவைகளா யிருக்கின்றன. அந்த சலனங்களின் மிகச்சொற்ப பாகத்தையே பூலோகத்தில் காண்கிறோம். ஏனெனில், விகாரமான ஸ்தூல அணுக்களை சலிக்கச் செய்வதில் பெரும்பாகம் செலவழிந்து விடுகின்றது. பூலோகஜீவியத்திலும் புவர்லோக ஜீவியம் கூர்மையும் உண்மையுமானதென்று அறியத்தக்கது.

இஃது எல்லா மனிதர்க்கும் ஒக்குமாயினும், சாதாரண ஜனங்கள் புவர்லோகத்தில் காரியப் பாடாக இயங்குவதில்லை. தாங்கள் புவர்லோகத்தில் காரியப்படலாமென்று அவர்கள் உண்மையில் அறியவில்லை. அறியினும் அவ்விதம் காரியப்படுவது அவசியமென்பதை அவர்கள் அறியமாட்டார்கள். ஒருவன் புவர்லோகத்தில் அங்குமிங்கு மிதந்து, பலவித சந்தோஷ மனச்சலனங்களை யநுபவித்தல் சாதாரணம், இவ்வாறிருத்தலே தகுதியென்று பலஜனங்கள் கருதுகிறார்கள். அவர்களை இந்த நிலைமையினின்றும் எழுப்பி, மற்றையோர்க்கு உதவிசெய்வதில் தங்கள் காலத்தைப் பிரயோஜனமாக்கும்படி செய்ய, ஒரு பலமான நோக்கம் தேவைப்படுகின்றது. இவ்வித நோக்கம் சாதாரண மனிதர்க்கு இராதென்பது வெளிப்படை. நாம் பிரஹ்மக்ஞான விஷயங்களைக் கற்க ஆரம்பித்து, அவ்வழியில்

விகாஸ முறையின் நெறியை அறிந்து, சிருஷ்டிப் பொருள்களின் உத்தேசத்தைத் தெரிந்துகொள்ளும்போது, அந்த விகாஸத்தை முன்னேறச் செய்யவும், உத்தேசம் நிறைவேறச் செய்யவும், இவ்வுண்மைகளை நம்மோடுள்ள மனிதரும் அறிந்து, தங்கள் சுமைகளை லகுவாக்கிக்கொண்டு விருத்திமார்க்கத்தில் தடையின்றிச் செல்லும்படி செய்யவும் நமக்குள் உண்மையான விருப்ப முண்டாகின்றது.

ஒருவன் இவ்வாறு விழிக்கப்பெறின், தன் கடமையை யெவ்வாறு தொடங்கி நடத்தற்பாலன்? நாம் ஒவ்வொருவரும் சக்திக்கேற்ற அளவில் அதனைச் செய்யத்தக்கவர்களாகவே யிருக்கிறோம். ஆனால் அவ்வித வழக்கம் ஏற்படவில்லை. சாதாரண பலமும் தேகக்கட்டும் உள்ளார் எவ்ரும் எப்படி ஜலத்தில் நீந்தத்தக்கவர்களாயிருக்கிறார்களோ அப்படியே, சாதாரண விகாஸமும், மானஸத்தேர்ச்சியு முள்ளார் எவரும் ஸூக்ஷ்ம சரீரத்தால் காரியப்படலாம். ஆழமான ஜலத்தில் பத்திரமாய் இறங்கி நீந்துமுன் அவ்வித வழக்கமற்றோர் அதைப்பற்றி கொஞ்சந்தெரிந்து கொள்ளல் அவசியமாவது போலவே புவர்லோகத்தில் இயங்க விரும்புவோனும் அதைப்பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். பல்லாயிர வருடங்களாய் ஸ்தூல சரீரத்தின் வழியாகமாத்திரமே ஸூக்ஷ்ம சரீரம் இயங்குவதென்னும் வழக்கம் மாந்தரிடம் பலமாயிருத்தலால், ஸூக்ஷ்ம சரீரம் தனக்காகவும் பிறர்க்காகவும் புவர்லோகத்தில் இயங்கவும் தனது இச்சையால் நடத்தப்படவும் கூடுமென்பதை ஜனங்கள் அறிகிறார்களில்லை. புவர்லோகக் காரியப்பாட்டிற்கு ஸ்தூல சலனங்களை யெதிர் பார்த்தவர்களாய் ஜனங்கள் அந்த லோகத்தில் விழிப்பற்றவர்கள் போலிருக்கிறார்கள்.

ஒருவன் முதல் முதல் புவர்லோகத்தில் உதவிசெய்ய ஆரம்பித்தற்குப் பலவழிகளுண்டு. தனது உறவினன் அல்லது நண்பனின் இறந்ததாய் வைத்துக்கொள்வோம். நித்திரையில் அவனைப் புவர்லோகத்தில் கண்டு உதவிசெய்தற்கு தான் அநுஷ்டிக்க வேண்டிய முறை இதுவே. அதாவது நித்திரைக்கு முன் அவனைப்பற்றி சிந்தித்து, அவனுக்கு அவசியமான எவ்வித உதவியும் செய்வேன் என்று திடமாய்த் தீர்மானிக்க வேண்டும். இறந்தவர்களைப் புவர்லோகத்தில் கண்டு சம்பாஷித்தற்கு யாதொரு உதவியும் அவசியமில்லை. நாம் இரவில் ஸ்தூல சரீரத்தை விட்டவுடனே இறந்துபோன

நண்பனுக்குப் பக்கத்தில் நெருங்கி யிருக்கிறோமென்பதை அறியவேண்டும். ஆயினும் நாம் எப்போதும் ஞாபகத்தில் வைக்கத் தக்க முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது, இறந்தவனுக்காக படும் எல்லாத் துக்கங்களையும் அகற்றிவிடுதலாம். அப்படிச் செய்தல் அவனுக்கு நன்கு உதவும்.

உணர்ச்சிகளின் கூர்மையை மழுங்கச்செய்யும் ஸ்தூல சரீரம் போய்விட்டபடியால் இறந்தவனை நமது கவலைகள் பலமாய்த் துன்புறுத்தும். அவன் நமது சூக்ஷ்ம சரீரத்தைமாத்திரமே பார்க்கிறான். நமது மநச்சலன உணர்ச்சிகள் அவனுக்குப் புலப்படுகின்றன. நம் ஸ்தூலவிவகாரங்களை அவன் காணமாட்டான். உதாரணமாய் நாம் படிக்கும் புத்தகம் இன்னதென்று அவனுக்குத் தெரியாது. ஆயினும் நமது சுகதுக்க வுணர்ச்சிகளை யறிகிறான். ஆனால் உணர்ச்சிகளுக்கு ஹேதுவாயுள்ள நமது எண்ணத்தையும் அவன் காணமாட்டான். தனது விருப்பு வெறுப்புகளை ஒருவன் இறக்கும்போது தன்னோடு கொண்டு செல்கிறான். புவர்லோகத்தில் தனது பழைய நண்பர்களைக் காணும் போது அவர்களைத் தெரிந்து கொள்ளுகிறான். அதற்குமுன் தான் கண்டிராத புதிய நண்பர்களையும் அங்கே உண்டாக்கிக் கொள்ளுகிறான்.

புவர்லோகத்தில் உதவிசெய்ய விரும்புவோர் துக்கத்தை மாத்திரம் விட்டால் போதாது. எவ்வித மன எழுச்சியையும் தவிர்க்க வேண்டும். தோற்றுத்துணைவர்க்கு பூர்ணசாந்தம் எல்லா வற்றினும் அவசியமானது. புவர்லோகத்தில் உதவிசெய்ய வேண்டுமென்னும், விருப்பம் ஒரு குலமகளுக்கு விசேஷமாயிருந்தது. தனது அளவு கடந்த அவாவினால் அந்த ஸ்திரீ தாங்கமுடியாத மன வெழுச்சியை விருத்தி செய்துகொண்டாள். எப்போதும் மனவெழுச்சி கொடிய சலனமும் தீச்சுடர்போன்ற கொழுந்துகளுமுள்ளதாய் சூக்ஷ்ம சரீரத்தில் பூதாகாரமாய்த் தோன்றும் இயல்புள்ளது. புதிதாய் இறந்த ஒருவன் அந்த ஸ்திரீயின் உதவிக்குப் பாத்திரமானான். அவன் புவர்லோகத்தன்மை யறியாதவனாக, அச்சமும் கோழைத்தன்மையும் பொருந்தியிருந்தான். தன்னைநோக்கி ஒரு பூதாகாரமான அக்கினிக் கோலம் விரைந்து வருவதைக் கண்ட அவன் பெருந்திகிற்கொண்டு

பூமியின் ஒவ்வொரு கோடிக்கும் ஓடினான். புராணங்களிற் சொல்லப்பெற்ற யமகிங்கரனென்று அதனை யெண்ணினான். அதற்குத் தப்பியோடும் தன்னை அது 'விடேன் தொடேனென்று' தொடர்ந்தமையால் சிலகாலம் அவனது திகில் விருத்திபெற்றது.

இறக்குந்தருவாயிலுள்ள ஒரு நண்பன் அல்லது பந்துவை முன்னிட்டு ஒருவன் புதிதாக இக்கைங்கரியத்தை யாரம்பித்தல் சாத்தியம். ஸ்தூல சரீரத்துடனேயே அவனை நெருங்கி அவனோடு சம்பாஷிக்கவும், இவ்வித சம்பாஷணைக்கு அவனது வியாதி இடமளிக்கவும் வாய்த்தால், மரணத்தின் நிலைமைகளையும், மரணத்திற்குப் பின்புள்ள நிலைமைகளையும் பற்றி அவனோடு விவேகமாய்ச் சம்பாஷிப்பது நலம். அதனால் அவனது மனம் ஆறுதல் பெற்று பாரங்குறையும். உண்மையாகவே இறக்கப்போகும் ஒருவனுக்கு இவ்வித நண்பனின் சந்திப்பும், சம்பாஷணையும் மிக்க ஆற்றலை விளைவிக்கும்.

இவ்வித ஸ்தூல சந்திப்பு சம்பாஷணைகட்கு சிலகாரணங்களால் தடையுண்டாயின், நித்திரை காலத்தில் புவர்லோகத்திலிருந்து அவனுக்கு அதிக உதவிசெய்யலாம். இதில் பயிற்சியில்லாத மனிதன் இவ்வித உதவிசெய்ய விரும்பினால், எங்கள் புத்தகங்களில் சொல்லப்பெற்ற விதிகளை யநுஷ்டிக்கவேண்டும். "குறிப்பிட்ட மனிதனுக்கு உதவி செய்வேன்" என்று நித்திரைக்கு முன் ஒரேமனதாய்ச்சிந்தித்து தான் எடுத்தாளப்புகும் நியாயங்களையும், சொல்லப்போகும் வார்த்தைகளையுங்கூட நன்றாய்த் தீர்மானிக்கவேண்டும். விழித்திருக்கையில் எவ்வளவு தெளிவாயும் நுட்பமாயும் ஒருவன் தீர்மானிக்கின்றானோ அவ்வளவு உறுதியாக நித்திரையின்போது தன் சூக்ஷ்ம சரீரத்தால் புவர்லோகத்தில் அதனை நிறைவேற்றுவானென்பது நிச்சயம்.

நோயாளிக்கு அறிவிக்கும் விதம் இதேமாதிரிதான். மரணத்தை நெருங்கும் நோயாளிக்கு உதவிசெய்ய முன்வருவோர், அவனது மனதைத் தேற்றி சாந்தமாக்குவதையும் மரணம் இயற்கையானது, லகுவானது, எவ்வகையினும் ஆழமான இருண்ட அகழியில் பயங்கரமாய் விழுவது போன்றதல்ல என்று அவன் மனதில் நன்றாய்ப் பொருந்தும்படி செய்வதையும் பிரதான நோக்கமாய்க் கொள்ள வேண்டும். புவர்லோகத்தின் தன்மையும், ஒருவன் நலம்பெற விரும்

பினுல் அதில் தன்வாழ்நாளை நடத்தவேண்டிய விதமும், அதற்குப் பாலுள்ள ஸ்வர்க்கலோகஞ்சென்று விருத்திபெறுதற்கு தான் செய்யவேண்டிய முறைபும் கொஞ்சங்கொஞ்சமாய் அந்த நோயாளிக்கு விவரிக்கப்படல் வேண்டும். நிபாயோதிதாரணங்களையும் புத்திமதிகளையுங்கிட, உதவிசெய்வோனுடைய யோக்கியதையும் மனோநிலையும் அதிகபலனை விளைவிக்குமென்பது எப்போதும் ஞாபகத்தில் வைக்கற்பாலது. அவன் இவ்வித பரோபகாரத்தில் மிக்க சாந்தமாகவும் உறுதியுடனும் தலையிடவேண்டும். உதவிசெய்வோன் கவலையான மனவெழுச்சியுள்ளோனுயின் முன்சொன்ன பேதைமையான ஸ்திரீயைப்போல் நன்மைக்குப் பதிலாக தீமையையே விளைவிப்பான்.

இவ்வாறுசெய்ய மேற்கொண்ட உதவியானது நோயாளியின் மரணத்திற்குப் பின்னும் தொடர்ச்சியாய் நடைபெறவேண்டும். இறந்தவுடன் பிரக்ஞாபங்கமுண்டாகும். இந்த அவஸ்தை சில காரணங்களால்ஒருவினுடிமுதல் சிலவாரங்கள் வரையில்நீடித்திருப்பதுண்டு. தேற்சியுள்ள சீஷன் சுபாவமாகவே இறந்தவனுடைய பிரக்ஞா நிலையை அறிந்தவனுய் அதற்கேற்றபடி தன் உதவியை நடத்துகிறுன். தேற்சியில்லாத மனிதனும், நோயாளி இறந்தபின் உதவி செய்யவும் தொடர்ந்துவரும் பல இராக்காலங்களில் தன்னுலான உதவியை அவனுக்குச்செய்வதில் தவறுமல் சித்தமாயிருக்கவும் தன்னைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மரணத்திற்குப் பின்னுண்டாகும் பிரக்ஞாபங்க நிலைமையின் காலம் பலவேறு சந்தர்ப்பங்களால் வித்தியாசப்படுவதால் இவ்விஷயத்தில் ஒரு பொது வொழுங்கை விவரித்தல் கூடாது.

துன்பமுறும் ஒருவர்க்காவது உதவிசெய்ய நாம் ஒவ்வொரு இரவிலும் பிரயாசைப்படவேண்டும். துன்பத்தின் சரியான தன்மையை நாம் அறிந்திருப்பின், அதற்கேற்றபடி நமது உதவிகளைப் பிரயோகிக்கவேண்டும். துன்பமுறுவோன் பலவீனமும், களைப்பும் அடைந்திருப்பின், சங்கற்ப சக்தியால் அவனுக்கு ஸ்தூல பலத்தை யூட்டவேண்டும். அவன் மனவெழுச்சி கொண்டோ, துன்பத்தைப் பிறப்பித்துக்கொண்டோ இருப்பின், அவனைக் கம்பளியால் போர்த்துவதுபோல தனது மனோசக்தியின் சாந்தமும் அமைதியுமான கவசத்தால் போர்த்தவேண்டும்.

(இன்னும் வரும்)

அ. நம்மாழ்வார்.

453

ஷிந்துக்களின் பூர்வ நூல்கள்.

(3-ம் தொகுதி 293-ம் பக்கத்தொடர்ச்சி)

வேதங்கள்.

வேதங்கள் நான்கு:—(1) ரிக்வேதம். (2) யஜுர்வேதம். (3) ஸாமவேதம். (4) அதர்வவேதம்.

ரிக்வேத ஸம்ஹிதை.

இவற்றுள் ஆதியானதும் எல்லா வேதங்களுக்கும் ஆதாரமானதும் ரிக்வேதம்.

இருவகை வகுப்பு.

ரிக்வேத ஸம்ஹிதை யானது.

(1) 8 அஷ்டகங்கள், =64 அத்தியாயங்கள்,=2006 வர்க்கங்கள்,= 10580 ரிக்குகள்.

(2) 10 மண்டலங்கள்= 85 அநுவாகங்கள்= 1017 ஸூக்தங்கள் = 10580 ரிக்குகள்.

ஆக இருவகையாய் வகுக்கப் பட்டிருக்கின்றது.

விவரம்.

மண்டலம்		அஷ்டகம்	இயற்றிய ரிஷிகள்
1	—	1—2. 70	பலரிஷி வம்சத்தார், குலங்கள்.
2	—	2. 71—2. 113	க்ரித்ஸமதர்
3	—	2. 114—3. 56	விசுவாமித்ரர்
4	—	3. 57—3. 114	வாமதேவர்
5	—	3. 115—4. 79	அத்ரி
6	—	4. 80—5. 14	பாரத்வாஜர்
7	—	5. 15—5. 118	வஸிஷ்டர்
8	—	5. 119—6. 81	கண்வர்
9	—	6. 82—7. 71	ஆங்கிரஸ்
10	—	7. 72—8 முடிவு.	

தேவதைகள்.

முதல் எட்டு மண்டலங்களில் உள்ள மந்த்ரங்கள் முறையே அக்னி, இந்திரன், விச்வேதேவர்களைப்பற்றிய வைகளாய் ஓர் க்ரமமாய் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. 9-வது மண்டல மந்திரங்கள் விசேஷமாய் ஸோமத்தைப்பற்றியவை. அவைகள் ஸாமஸம்ஹிதைக்கு ஒத்திருக்கின்றன. ஸாமத்தின் 3-ல் ஒருபாகம் 9-வது மண்டலத்தை யனுஸரித்திருக்கின்றது. 10-வது மண்டலம் அதர்வ ஸம்ஹிதைக்கு விசேஷ ஆதாரமாயிருக்கின்றது.

சாகை, சரணம்.

பூர்வ காலத்தில் வேத மந்த்ரங்கள் புஸ்தகங்களில் எழுதப்படாததாலும், கர்ண பரம்பரையாய் குரு சிஷ்யக்ரமப்படி அத்தியயனம் செய்யப்பட்டு, வந்தனவாதலாலும் நாளடைவில் காலதேச பேதங்களாய் வேதமந்த்ரங்களிலும் பாடபேதங்கள் ஏற்பட்டுவிட்டன. இவ்வாறு ஏற்பட்ட பாட பேதங்களுக்குச் சாகைகள் (கிளைகள்) (Recensions) எனப்படும். இவ்வாறு ஒவ்வொரு வேதத்துக்கும் பலசாகைகளிருந்தன வென்று தெரியவருகின்றது. குறிப்பிட்டசாகையை பரம்பரையாய் அநுஷ்டித்து வருவதால், வேத அனுஷ்டானங்களிலேயே பல மதங்கள் (Schools) ஏற்பட்டுவிட்டன. அவ்வாறு ஏற்பட்ட மதங்களே சரணங்கள் எனப்படும். ஸாமம், யஜுஸ், அதர்வம் என்ற மற்ற மூன்று வேதங்களும் ஆதியில் ரிக்வேதத்தின் சாகைகளாயிருந்து பிறகு தனித்தனி வேதங்களாக ஏற்பட்டிருக்கலாமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்கள்.

(தத்பரிசாரெணள இதரௌ வேதௌ
மற்ற இரண்டு ஸாமம், யஜுஸ்—வேதங்கள் ரிக்வேதத்தின் அனுபந்தங்கள்.
கௌசிதகி. ப்ரா VI. 11)

ஆதியில் சாகைக்கும் சரணத்துக்கும் வித்யாஸம் கொஞ்ச மிருந்தபோதிலும் பிற்காலத்தில் இவ்விரு பதங்களும் ஒரே அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. [நிருக்தம் I. 17 ல் 'ஸர்வ சரணானாம்' 'ஸர்வ சாவாந்தராணாம்' என்றும், பாணினீ II. 4, 3 ல் "சரண: சாவு:" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.]

முன் காலத்தில் ரிக்வேதத்துக்கு அநேக சாகைக ளிருந்தன வென்றும் அவைகளி லநேகம் மறந்து போனவை தவிர, ஐந்து மாத்திரம் இருக்கின்றன வென்றும் சரணவ்யூஹம் என்னும் க்ரந்தம் கூறுகின்றது.

அவையாவன:—

(1) சாகல சாகை, (2) பாஷ்கல சாகை, (3) ஆச்வலாயன சாகை,
(4) ஸாங்க்யாயன சாகை, (5) மாண்டுகாயன சாகை.

ஸூத்ர காலத்திற்குப் பிறகு இந்த சாகைகளின் வித்யாஸங்கள் அநேகமாய் மாறிவிட்டதாய்த் தோன்றுகின்றது. இவற்றுள் ஆச்வலாயன சாகையானது அதிக ப்ரபலமானதாகவும் பிற்பட்டு உண்டானதாகவும் தோன்றுகின்றது.

ரிக்வேத ப்ராம்மணங்கள்.

ரிக்வேதத்தை யனுசரித்து முக்யமாய் இரண்டு ப்ராம்மணங்களுண்டு. அவையாவன:—

(1) ஐதரேய ப்ராம்மணம்.
(2) ஸாங்க்யாயன (அல்லது கௌசிதகி) ப்ராம்மணம்.

1. ஐதரேயப்ராம்மணம்.

கால வரையறையில் இது முந்தியது. இது 8 பஞ்சகங்கள் கொண்ட (8×5) 40 அத்யாயங்கள் அடங்கியது. ஐதரேய ப்ராம்மணத்துக்கு ஸாயனுசார்யர் பாஷ்யம் எழுதி யிருக்கின்றார்.

2. கௌசீதகிப்ராம்மணம்.

இது 30 அத்யாயங்க ளடங்கியது. இதில் நைமிஷாரண்யத்தில் நடந்த ஓர் பெரிய யாகத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. மாதவர் புதல்வரான விநயகர் என்பவர் இதற்கு பாஷ்யம் எழுதியிருக்கின்றார்.

இப்ராம்மணங்கள் காலத்தில், வேதங்கள் மூன்றுதான் என்றும் அவைகள் த்ரயீ என்னும் கூட்டுப் (Collective) பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன வென்றும் அறியலாம்.

ரிக் வேத ஆரண்யகங்கள்.

ஆரண்யகம் என்றால், ரிஷிகளால், வனங்களில் வஸித்து, உலக ஸ்ருஷ்டி, அமைப்பு, ஆதாரம் முதலான அதிபௌதிக விஷயங்களை த்யானுதிகளால் அறிந்து வெளியிடப்பட்ட சாஸ்த்ரங்கள். இவைகள் பிற்பட்ட உபநிஷத்துக்களுக்கு ஆரம்ப நூல்களாகவும் ஆதாரமாகவு மிருக்கின்றன.

இரண்டு ஆரண்யகங்கள்:—

(1) ஐதரேய ஆரண்யகம். (2) கௌசீதகீ ஆரண்யகம்.

ரிக்வேத உபநிஷத்துக்கள்.

(1) ஐதரேயோப நிஷத். (2) கௌசீதகீ உபநிஷத்.

ஸாம வேத ஸம்ஹிதை.

இது 154 ரிக்குக ளடங்கியது. அவற்றுள் 1471 ரிக்குகள். ரிக்வேதத்தில் விசேஷமாய் 8 வது 9 வது மண்டலங்களில் காணப்படுகின்றனவாம்.

ஸாம வேத ப்ராம்மணங்கள்.

(1) பஞ்சவிம்ச (அல்லது தண்ட்ய) ப்ராம்மணம். இது 25 பாகங்களுள்ளது. விசேஷமாய் ஸோம யாகங்களையும் பலவித ஸத்ர யாகங்களையும் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது.

(2) ஷட்விம்சப்ராம்மணம். (3) சாந்தோக்ய ப்ராம்மணம்.

ஸாமவேத உப நிஷத்துக்கள்.

(1) சாந்தோக்ய உபநிஷத். (2) கேன உபநிஷத்.

யஜுர் வேதம்.

(1) கிருஷ்ண யஜுர் வேதம்.

(2) சுக்ல யஜுர் வேதம். என இருவகைப்படும்.

i கிருஷ்ண யஜுர் வேதம்.

கிருஷ்ண யஜுர் வேத ஸம்ஹிதை 3 சாகைகளா யிருக்கின்றன. அவை யாவன:—

(1) தைத்திரீய ஸம்ஹிதை (ஆபஸ்தம்ப ஸூத்ரத்தைச் சேர்ந்தது.)
(2) காதக ஸம்ஹிதை. (3) ஆத்ரேய ஸம்ஹிதை.

தைத்ரிய ஸம்ஹிதை—7 காண்டம்.—44 ப்ரஶ்னம்.—651 அனுவாகம். —2198 கண்டிகைகள் அடங்கியது.

ப்ராம்மணம்:—தைத்ரீய ப்ராம்மணம்.

ஆரண்யகம்:—தைத்திரீய ஆரண்யகம்.

உபநிஷத்துக்கள்:— 1. தைத்திரீ யோப நிஷத்.
2. காதகோப நிஷத்.
3. மைத்ராயணீ யோபநிஷத்.
4. ஶ்வேதாஶ்வத ரோபநிஷத்.
5. நாராயணீ யோபநிஷத்.

ii சுக்ல யஜுர்வேதம்.

ரிஷி:—யாக்ஞவல்க்யர் (என்ற வாஜஸனீய.) சுக்ல யஜுர்வேத கர்த்தா வென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸம்ஹிதை:—வாஜஸனீய ஸம்ஹிதை.
ப்ராம்மணம்:—ஶதபதப்ராம்மணம்.
ஆரண்யகம்:—பிருஹதாரண்யகம்.
உபநிஷத்துக்கள்:—(1) ப்ருஹதாரண்ய கோபநிஷத்
(2) ஈசோப நிஷத்.

அதர்வ வேதம்.

ஸம்ஹிதை.
அதர்வ ஸம்ஹிதை—20 காண்டம்
—38 ப்ரபாதகம்
—760 ஸூக்தம்
—6000 மந்த்ரம்.
ப்ராம்மணம்:—கோபத ப்ராம்மணம்.
உபநிஷத்துக்கள்:—(1) முண்டகோபநிஷத். (2) ப்ரஶ்னோபநிஷத்.
(3) மாண்டூக்யோபநிஷத். (4) அதர்வோபநிஷத்.

(இன்னும் வரும்)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

புத்தகவரவு.

எல்லாம் ஒன்றே:—இச்சிறு புத்தகமானது ஸநாதந தர்மத்தின் ஞானத்தை நன்றாய்ப் புகட்டுகின்றது. (1) ஒன்று, (2) நீ, (3) கடவுள், (4) சாந்தம், (5) செயல், (6) அஹம்பாவம் என ஆறு அதிகாரங்களை யுடையது இப்புத்தகம். இப்புத்தகம் அளவில்மட்டும் சிறியதாயினும், இதன் மாண்பு மிகப் பெரியதே. புஸ்தகம் நல்ல கடிதத்தில் முத்துப் போன்ற அக்ஷரங்களால் அச்சியற்றப்பெற்று வெகு அழகாய் அமைந்துள்ளது. இதன் விலை அணா இரண்டு தான். வேண்டுவோர் மகா-ா-ா-ஸ்ரீ R. சுப்பிரமணிய ஐயரவர்கள், ஸெண்ட் பீடர்ஸ் ஸ்கூல், தஞ்சாவூர் என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பத்திரிகை வரவு.

நக்ஷத்திர தூதன்:—உதய நக்ஷத்திர சங்கத்தலைவரால் நடை பெற்று வரும் நக்ஷத்திர தூதன் (Herald of the Star) என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் 1914வரு ஜனவரி மீ த்து சஞ்சிகையும், பிப்பிரவரி மீ த்து சஞ்சிகையும், மாதாஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார், ஸ்ரீமான் லெட்பீடரவர்கள் ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் இன்னும் பற்பல நிபுணர்களால் எழுதப்பெற்ற அருமையான சிறந்த வியாஸங்களுடனும், அவர்களின் படங்களுடனும் வெளிவந்திருக்கின்றன. பத்திரிகை உயர்ந்த கிளேஸ் ஆர்ட் பேப்பரில் நல்ல நீல (Blue) மையில் அச்சாகியிருக்கிறது. ஸஞ்சிகையின் வெளித்தோற்றத்தினின்றே ஸுருசி (Æsthetic Culture) என்றால் என்ன வென்று நன்கு விளங்கும். இதன் வருஷ சந்தா ரூ 4—8—0 தான். வேண்டுவோர் "மானேஜர், தியஸாபிகல் பப்ளிஷிங் ஹவுஸ் அடையாறு, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஷை சங்கத்தைச் சேர்ந்த ஆங்கிலங் கல்லாத தமிழ் மக்களனைவரும் இப் பத்திரிகையை பிறர் சகாயத்தைக் கொண்டாவது படித்து வருதல் நலந்தரும். லண்டன்மா நகரில் ரீஜெண்ட் தெருவில் (Regent Street) ஒரு கட்டிடத்தில் ஷை பத்திரிகை ஆபீஸ் அமைந்துள்ளது. கிறீஸ்து, புத்தர் இவர்கள் அவதரித்திருப்பது. பேரல் ரூபங்கள் அமைக்கப்பட்டு அந்த ஆபீஸ், தெருவிற் போகிறவர்களை யெல்லாம், இதென்ன ஆபீஸ் என்று கூர்ந்து விசாரிக்கும்படி தூண்டத்தக்கதாய் இருக்கிறதாம். அநேக கிறீஸ்தவ மத சாஸ்திரிகள் (Clergymen) அப்பத்திரிகை ஆபீஸுக்குள் போய்ப் பார்த்து அதி விநோதத்துடன் சபையின் வரலாறுகளை விசாரிக்கிறார்களாம். உதய நக்ஷத்திர ஸங்கத்தில் மெம்பர்களாயிருக்கிற தியாஸபிஸ்டுகள் சிலர், வெளியிலிருந்து வந்து விசாரிக்கிறவர்களுக்கு சபையின் கருத்துக்களை விளக்குவதற்காகவே பிரதி தினமும் அவ்வாபீஸுக்குப் போகிறார்கள்.

சமாசாரம்.

நமது பிரஹ்மஞான ஸபைக்கு, பாரஸீகத்தில் இப்போது தான் முதன் முதலாக ஒரு கிளைச்சபை ஏற்பட்டிருக்கிறது. அது ஷைராஸ் என்ற ஊரில் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கிளைச்சபையின் பெயர் அந்சுமான்-இ-ஸூபி என்பதாம். அதன் பிரஸிடெண்ட் அவர்கள் ஷேக் முஹம்மது ரஹீம் என்பவர். அதன் செக்ரிடரியவர்கள் அம்பா பிரஸாத் ஸூபி என்பவர். இதைப் படிக்கும் நமக்குத் தோன்றுவது என்னவெனின் நமது பிரஹ்மஞான ஸபையானது ஒரு ஆலின் விதையை நிகர்த்து கொஞ்சங் கொஞ்சமாக நாளடைவில் ஏராளமாக அபிவிருத்தி யடைந்து வருவதே யாம்.

உதய நக்ஷத்திர ஸங்கம்:—ருஷியா தேசத்திலிருக்கும் ஸான்ஹூய்ம் காகஸஸ் என்ற விடத்துக் கிறிஸ்தவ மடாதிபதி (Archbishop) ஒருவர் "மடத்திற்கு வெளியே இருந்து" என இயற்றி யிருக்கும் ஒரு புஸ்தகத்தில் கிறிஸ்து என்ற மஹான் அவதரிக்கும் காலம் சமீபிக்கிறது, அப்படி யவதரிக்கும் காலத்தில் அவரைச் சரியாய்த் தெரிந்து கொண்டு வரவேற்பதற்குத் தகுந்தபடி நாம் குணசீலர்களா யமையவேண்டுமென்றும் நன்கு வற்புறுத்தி ஷை சங்கத்தின் கருத்துக்களையே நிரூபித்திருக்கிறார். நம் ஸங்கத்தின் கொள்கைகளும் கருத்துக்களும் பிரசாரகர்களின்றித் தாமாகவே, உலகத்தின் பல பாகங்களில் பெரியார்களின் மநத்திலுதித்துப் பிரகாசிப்பது நம் ஸங்கத்தின் மாட்சிமையை ஒருவாறு விளக்குகிறது.

ஆகாச கமனம் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு பள்ளிக்கூடம்:—நம் தேசத்தில் ஷை பள்ளிக்கூடம் ஸீதாபுரம் (Sitapur) என்ற ஊரில் ஒன்று உள்ளது. இது தற்கால நாகரிகத்தின் புதுமைகளுக்குள் ளெல்லாம் ஒரு புதுமையாயிருக்கிறது. நம் பூர்வ சரித்திரங்களில் மஹா ராஜாக்கள் ஆகாச விமானங்களில் சென்றார்களென அடிக்கடி படிக்கிறோம். அக்காலங்களில் ஸாதாரணமாயிருந்த ஒரு ஸம்பவம், தற்காலத்தில் இதுவரை நடப்பது அஸாத்தியமாயிருந்தது. இன்னும் வெகு சொற்பகாலத்துக்குள் ஆகாசகமனம் வெகு ஸாதாரணமாக வழங்கப் பெறும்.

ஆகாசகமனம் அப்பியஸிக்கும் மாணாக்கர்களை முதலில் ஒரு நாற்காலியில் உட்கார்த்தி அத்துடன் நன்றாய்ச் சேர்த்துக் கட்டி ஐந்து நிமிஷம் நாற்காலியோடு தலைகீழாகத் தொங்க விடுவார்கள். நாளாக ஆக ஏழு நிமிஷம், பத்து நிமிஷம் இவ்வாறாக அதிக காலம் தலை கீழாகத் தொங்க விடுவார்கள். தலை கீழாகத் தொங்குதல் ஸஹஜமாக ஏற்பட்ட பின் பறக்கக் கற்றுக் கொடுக்கப்படுவார்கள். சிலர் இவ்வாறு தலைகீழாகத் தொங்கி அப்பியஸிப்பது சங்கட

மெனக்கருதுவார்கள். ஆகாயத்தில் ஸ்வேச்சையாய்ப் பறந்துகொண்டு நல்லகாட்சிகளைப் பார்க்கும் சந்தோஷத்தை உத்தேசிக்க முதலில் சொற்ப சிரமம் பெரிதல்ல. ஸங்கீத சாஸ்திர அப்பியாஸத்தில் முதன்மையிற் கற்கும் ஸரிகமபதநிஸ என்ற ஸப்த ஸ்வரங்களைப்போல, தலைகீழாகத் தொங்குதல் இவ்வாகாசகமந அப்பியாஸத்தில் ஏற்படுகின்றது. ஸ்ரீமான் (M. Pegoud) எம். பீகோத் என்ற பிரெஞ்சுக்காரரொருவர் இந்தப் பயிற்சிகளால் வாயு மண்டலத்திலும் ஸஞ்சாரம் சுலபமாய் ஏற்படும் எனக் கண்டு பிடித்தவர். இக்காலத்தில் ஆகாயத்தில் பறக்கக்கூடிய யந்திரங்கள் நாளுக்கு நாள் எவ்வளவுவிருத்தி யடைந்து வருகின்றனவோ அவ்வளவுக் களவு யந்திரமின்றிக்கூடப் பறக்கும் ஸாமர்த்திய சாலிகளும் வெகு பேர் ஏற்பட்டு வருகிறார்கள்.

நடுக்காவேரியில் "தோட்டக்காடு நிதி" என்று ஏற்பட்டிருக்கும் தர்மநிதியை ஆதாரமாக வைத்துக் கொண்டு "மேரி மகாராணி பாடசாலை" என்று ஒரு ஸ்திரமான கிராம வித்தியாசாலை ஸ்தாபிப்பதற்குத் தகுந்த முயற்சிகள் அதிதீவிரமாக நடந்துவருகின்றன. சாமந்தநாயக்கன் மண்டபம் என்கிற வலுவான ஒரு பழைய கட்டிடத்தைப்புதுப்பித்து ஜன்னல் முதலியன வைத்துச்சீர்திருத்திவருகிறார்கள். தர்ம நிதிக்கு இது வரையில் ரூபாய் 5000 சேர்த்துவிட வழி செய்திருக்கிறார்கள். வித்தியா இலாகா உத்தியோகஸ்தர்கள் வந்து பார்த்து தகுந்த இதமொழிகள் சொல்லிப்போயிருப்பதாகத் தெரிகிறது. கூடிய சீக்கிரத்தில் பாடசாலை ஸ்தாபிக்கப்பெறும். அதேதினத்தில் அவ்வூர் கணேசர் ஆலயம் (இப்போது புதுப்பிக்கப்பட்டிருப்பது) கும்பாபிஷேகம் செய்யப்பெறும்.

ஜனங்களின் க்ஷேமத்திற்கு விரோதமாய் குற்றங்கள்செய்து நியாயஸ்தலங்களில் தண்டனை விதிக்கப்பட்டு ஜெயில்களில் காவலுண்டு காலங் கழித்து வெளியேறினவர்கள் அவர்கள் அநுஸரித்த வழிகளைத் துறந்து நல்வழிப்படுவதற்கு இந்தியாவில் சாதகங்கள் குறைவா யிருக்கின்றன. இங்கிலாந்து அமெரிக்கா முதலாகிய மேற்றிசை நாடுகளில் குற்றவாளிகளை காராகிருஹத்தில் அடைப்பது அவர்கள் பேரில் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்கிற கருத்துடன் இராஜாங்கத்தாரால் செய்யப்படத்தக்க தல்லவென்று கருதி அவர்கள் வெளியேறின பின்னர் ஒழுங்கான வழிகளைக் கைப்பற்றுவதற்காக அவர்கள் அச்சிறைச்சாலையில் இருக்கும்பொழுதே அதற்குரிய போதனைகளை அவர்களுக்கு போதிக்கவும், அவர்களுக்கு ஜீவனோபாயங்களை அடைவதற்குவேண்டிய சாதனங்களைச் செய்யவும் அதிதீவிரமாய் முயற்சித்துக்கொண்டு வருகிறார்கள்.

இந்தியாவிலுள்ள வயதான குற்றவாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஜெயில்களிலும் வாலிபர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட (Reformatories) என்ற சீர்திருத்தச் சாலைகளிலும் ஜீவனோபாயங்களைக் கற்பிப்பதற்கு வேண்டிய முயற்சி யெடுத்துக்கொண்ட போதிலும் அக்குற்றவாளிகளின் ஒழுக்கம் விருத்தியாவதற்குரிய முயற்சிகள் மிகக் குறைவாக விருக்கின்றன. ஒழுக்கமானது பெரும்பான்மை ஜனங்களுக்கு மதசம்பந்தமா யிருக்கிறபடியாலும் ராஜாங்கத்தாருக்கு மதப்பற்றுதல் கூடாததாலும் இவ்விஷயத்தில் அந்தந்த மதஸ்தர்கள் பிரவேசித்தாலன்றி அக்குற்றவாளிகளின் ஒழுக்கம் விருத்தியாகக் கூடியதில்லை.

சேலம் கலெக்ட்டராபீசில் அக்கவுண்டண்டு வேலை பார்த்து பென்ஷன் வாங்கிக்கொண்ட மகா-ள-ள-ஸ்ரீ S. முத்துசாமி ஐயரவர்கள் சேலம் ஜெயிலில் உள்ள இந்து குற்றவாளிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை முதலிய விடுமுறை நாட்களில் இந்துமத சம்பந்தமாயும் மற்ற ஒழுக்க சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் உபந்நியாஸம் செய்ய அனுமதிகேட்டு கவர்ண்மெண்டாரால் அந்த அனுமதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பரோபகாரமானது ஜெயில்கள் உள்ள எல்லா இடங்களிலும் பிரஸங்கங்கள் மூலமாகவும் உபந்நியாஸங்கள் மூலமாகவும், பஜனை சங்கீர்த்தன ஸாதகங்களுடனும் புராணங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டும் கதை ரூபமாகவும் (Magic Lantern Slides) ஆகிய நிழல் படங்கள் மூலமாயும் செய்யப்படுவது அதிக அவசியமாயிருக்கிறது.

நன்மொழி.

23. வெளி வேஷங்கள் சிறந்தவைகளாக தரித்துக்கொண்டிருப்பவரெல்லாம் ஸற்குண சீலர்களெனத் தீர்மானித்தல் கூடாது. பேக்கும்மட்டிப்பழம் பார்வைக்கு வெகு மனோஹரமாயிருந்தாலும் உண்மையில் மிகக்கசந்தருக்கும்.

24. தெருவில் இறைத்துக் கிடக்கும் சிறு கற்களெல்லாம் ரத்நங்களாயிருக்குமானால் ரத்நத்திற்கு ஏற்பட்டிருக்கும் மதிப்பு அற்றுப்போம். கற்கள் என்ற வர்க்கத்தைப் பொதுவாக எடுத்துப் பார்ப்போமானால், அதற்குள் தாரதம்யம் மேல் கீழ் என்ற வரையறை இல்லாவிடில் ரத்நங்களுக்கு மதிப்பேது?

25. உலகத்தில் ஒவ்வொருவனும், அவனவன் பெற்றிருக்கும் புத்தி விகாஸத்திற்குத் தக்கவாறு சிற்சில அபிப்பிராயங்களைக் கொண்டவனாகவிருக்கிறான். அவ்வபிப்பிராயங்கள் தான் அவனுக்குப் பரம ஸத்யமாகத்தோன்றும். ஒவ்வொரு தாய்க்கும் அவளவள் குழந்தையே அவளவளுக்குப் பெருமையன்றோ! காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சன்றோ!